1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு மாசி மாதம் 14-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 6-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### வழக்குத் தொடருவதெனமுடிவு

பிரதமர்பண்டாரநாயகா சென்ற வெள்ளிக்கிழமைகூடிய ஓர்மகாநாட்டிலே தமிழ்இலக்கமபொறித்த மோட்டார்தங்கள்மீது வழக்குத்தொடருவதெனமுடிவுசெய்யப் பட்டிருக்கிறது. இந்தமகாநாட்டில் போக்குவரத்து மந்திரியும், பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனறலும், போக்குவரத்து மந்திரி காரியாலய நிரந்தரகாரியதரிசியும், மற்றும்பல அரசாங்கஅதிகாரிகளும் கலந்துகொண்டார்கள்.

### சிங்களமும் போனஸ்திட்டமும்

சிங்களத்தில் தேர்ச்சிபெறும் அரசாங்கஊழியர்களுக்குப் போனஸ்வழங்குவதற்கான திட்டம்ஒன்றை வகுப்பதில் பொக்ஷபகுதி ஏன் காலதாமதம் செய்துவருகிறதென்று பிரதமர்பண்டாரநாயகா அதனைக்கேட்டிருக்கின்றார். இவ்விதம் காலதாமதஞ் செய்வதாலே அரசாங்கஊழியர்கள் இந்தப் போனஸ்திட்டம்பற்றிச் சந்தேகிக்க இடமேற்பட்டுள்ளதென்று அவர் நிதிமந்திரிக்கு எழுதியிருக்கின்றார்.

### கடல்-விமானத் தளங்கள்

திரிகோணமலையிலும், கட்டுநாயக்காவிலுமுள்ள கடற்படை, விமானப்படைத்தளங்களை இலங்கைஅரசாங்கம் எடுத்துக்கொள்ளும்போது அவற்றிலே வேலையிழக்கநேரும் ஆறுயிரவருக்கு மேற்பட்ட தொழிலாளருக்கு வேலைவசதிகள் அளிப்பதுபற்றி ஆராயுமாறு அரசாங்கபகுதிகள் கேட்கப்பட்டுள்ளன. இவர்களில் பெருந்தொகையானோர் பயிற்சிபெற்ற தொழிலாளர்களென்று அரசாங்கபகுதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கைமூலம் தெரியவருகிறது.

### அப்போஸ்தலிக்க ஸ்தானபதி

1952-ம் ஆண்டுமுதல் 1956-ம் ஆண்டுவரையிலே இந்தியாவில் பாப்பரசரின் ஸ்தானிகராகவும், இலங்கை, பர்மா, பாகிஸ்தான்முதலாம் நாடுகளில் அப்போஸ்தலிக்க ஸ்தானபதியாயும் விளங்கியிருந்தவரான மகாமேன்மை தங்கிய மாட்டின் லூக்காஸ்ஆண்டவர் அவர்கள் சுகத்தாழ்வு காரணமாகத் தமதுபதவிகளை இராசினாமாச்செய்து, வெளிநாடுகளிலே பரிசுத்தஸ்தானத்தின் சேவையிலிருந்து இளைப்பாறியிருக்கின்றார். தற்போதுஇவர் ரேமைநகரிலுள்ள ஆரோக்கியசாலைஒன்றில் இருந்துவருகின்றார். பரிசுத்தபிதா அவரதுசேவைகளைப் பாராட்டிப் "பாப்பரசர்சிம்மாசன மகிமைக்காப்பாளர்" எனும் உயரிய கௌரவமகிமைப்பட்டத்தை அவருக்குச் சன்மானித்திருக்கின்றார்.

### கோரமான மோட்டர்வான்விபத்து

நீர்கொழும்பைச்சேர்ந்த கிம்புலாப்பிட்டியாவிலே சென்றஞாயிற்றுக்கிழமைமாலை 5மணியளவில் ஏற்பட்ட ஓர்கோரமானவிபத்தில் இருவர் அந்த இடத்திலேயே மரணமாக, மற்றொருவர் பின்தமரணமடைந்தார். பத்துப்பேர் படுகாயமடைந்தார்கள் மோட்டர்வான்ஒன்று வீதியைவிட்டுவிலகிப் பக்கத்திலிருந்த ஓர்கடைக்குள் பாய்ந்தபோதே இந்தவிபத்து ஏற்படலாயிற்று. படுகாயமடைந்தவர்களிலும் இருவரின் நிலைமை அபாயகரமாய் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### புத்தகம்மிஷனின் சிபாரிசுகள்

சுதந்திரசதுக்கத்திலே அன்று சுதந்திரவிழாக்கூட்டத்தில் பிரதமர் பண்டாரநாயகா பேசுகையில்: புத்தகம்மிஷனின் சிபாரிசுகள் நிறைவேற்றி வைக்கப்படும்; ஆனால், ஏனையசமயஸ்தாபனங்களுக்கு எந்தவிதத்திலும் தீங்குசெய்யாமல்தான் நிறைவேற்றி வைக்கப் படுமெனக் கூறலாயினர். "சிங்களம்மட்டும்" சட்டமானது ஏனையவகுப்பினருக்கு— சிறுபான்மையினருக்கு—நீதியாகாத அடாதமுறையில் நடைமுறைக்குக் கொண்டுவரப் படுமென்று இந்நாட்டுமக்கள் எவ்வித அச்சமும் கொள்ளவேண்டியதில்லையென்று அப்போதுதானே உறுதிவாக்கும் அருளியிருக்கின்றார் பிரதமர் பண்டாரநாயகா.

### சிங்களத்தில் மட்டுமே

அரசாங்கத்தின் உபயோகத்திற்கென்று அச்சிடும்பத்திரங்களைச் சிங்களத்தில்மட்டுமே தயாரிக்கும்படியாக நிரந்தரக்காரியதரிசிகளையும், அரசாங்கபகுதிகளின் அதிகாரிகளையும் திறைசேரிகேட்டிருக்கின்றது. ஆயினும் சிங்களம்பயிலாத அரசாங்கஊழியர்கள் விளங்கிக்கொள்ளும்படியாக அப்பத்திரங்களின் அடிப்பகுதியில் தமிழிலும், ஆங்கிலத்திலும் விளக்கங்கொடுக்கும்படியும் தெரிவித்திருக்கிறது. சிங்களமொழிமாற்றம் பூரணமாகவந்ததும் தமிழ், ஆங்கிலமொழிவிளக்கம் நீக்கிவிடப்படுமெனத் தெரியவருகிறது. ஒவ்வோர் அரசாங்கபகுதியிலும் எத்தனை அரசாங்கஊழியர்கள் இருக்கின்றனரென்றும், இவர்களில் எத்தனைபேர் சிங்களம் எவ்வளவுதெரிந்தவர்களென்றும் அறிவிக்கும்படியும் அதிகாரிகள் கேட்கப்பட்டிருக்கின்றார்கள். இன்று 53அரசாங்கபகுதிகள் சிங்களத்திலேயே ஒன்றடனொன்று கடிதப்போக்குவரத்து நடத்துகின்றன. வடமாகாணத்திலும், கிழ்மாகாணத்திலுமுள்ள கச்சேரிகள் நீங்கலாக ஏனையகச்சேரிகளில் சிங்களமொழியிலேயே அலுவல்நடைபெறுகின்றது.

### பிரதிநிதியின் வேண்டுகோள்

திரிகோணமலை அர்ச். அந்தோனியார் பாடசாலையில் சென்ற 7-ந்திகதி நடைபெற்ற ஆடுமாடுகள்முதலாம் கால்நடைகளின்கண்காட்சியிலே திரிகோணமலைப்பிரதிநிதியான திரு. இராசவரோதயம்அவர்கள் பேசியபோது: "அரசாங்க உத்தியோகசேவையிலே வருங்காலத்தில் தமிழருக்கு இடமில்லையாகையால் தங்கள்பொருளாதாரத்திற்காக அவர்கள் கமத்தொழிலையும், கைத்தொழிலையுமே நம்பியிருக்கவேண்டும்; தங்கள்பொருளாதாரத்தை ஸ்திரமாக்கும்முயற்சியில் அவர்கள் கால்நடைகளைக் கருத்தாக வளர்க்கவேண்டுமென நான்கேட்டுக்கொள்ளுகிறேன்" என வேண்டுகோள் விடுக்கலாயினர்.

### சிறுபான்மையினரும் உரிமைகளும்

இலங்கை குடியரசாகும்போது, அதன்அரசியல்திட்டம் திருத்தப்படவிருக்கிறது; அப்போது சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கான அடிப்படை உரிமைச் சாசனசட்டமும் அரசியற்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்; அரசியல்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டிய அடிப்படைஉரிமைச்சாசனசட்டம்பற்றித் தற்போது அரசாங்கம் ஆலோசனைசெய்து வருகின்றதுஎன்று சென்றவெள்ளிக்கிழமை பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பிரதமர் பண்டாரநாயக தெரிவித்திருக்கின்றார். அரசியல்திட்டம் மாற்றியமைக்கப்படும்போது இப்படியான ஓர்சட்டத்தை அதில்சேர்க்கமுடியுமென அவர்கூறுகின்றார்.

### புதியசீமேந்துத் தொழிற்சாலைகள்

சீமெந்துசெய்ய இதுவரை சுண்ணும்புக்கல்லே பாவிக்கப்பட்டுவந்தது. தற்போது நுரைக்கல்லிலிருந்து சீமெந்துசெய்யக் கைத்தொழில் மந்திரிகாரியாலயம் திட்டமிடுகின்றது. சுண்ணும்புக்கல்லில் இருப்பதுபோல இந்தநுரைக்கல்லிலும் "கல்சியம் கார்பனேற்" இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. தற்போது அமெரிக்க கம்பெனிஒன்று கடற்கரையில் காணப்படும் இவ்விதகல்லிலிருந்து வருடம் ஒன்றுக்கு மூன்றுலட்சம்தொன் சீமெந்துசெய்கின்றது. பரிசோதனை வெற்றியளிக்குமிடத்து நுரைகல்லிலிருந்து செய்யப்படும் சீமெந்துத் தொழிற்சாலை அக்குறணையில் அமைக்கப்படுமெனத் தெரியவருகிறது. புத்தளத்திலும் வருடம்ஒன்றுக்கு ஒருலட்சம்தொன் சீமெந்துசெய்யக்கூடிய சீமெந்துத்தொழிற்சாலை அமைக்கப் படவிருக்கிறது. ஆயினும் ஆராய்ச்சி நடத்திவரும் செக்கோசிலவாகியநிபுணர்கள் தங்கள்அறிக்கையைச் சமர்ப்பிக்குமுன் எதனையும் அமைக்கும் வேலை தொடக்கப்படமாட்டாது.

### கல்விமந்திரிக்குப்பாராட்டுரை

"கல்விமந்திரி தஹநாயகா நாட்டின் கல்விக்கொள்கையைக் குழப்பியடித்துவிட்டார்; அவருடையபோக்கு பல்வேறு சமூகத்தினருக்குமிடையே மனக்கசப்பை உண்டுபண்ணி நமது பிள்ளைகளின் வருங்காலத்தை இருள்சூழ்ந்ததாக்கிவிட்டது; முன்னேற்றத்திற்குக் கல்வியே பிரதான பாதை; ஆகவே, கல்விக்குத் தக்கமதிப்புக் கொடுக்கவேண்டியது நம்மனைவோரதும் கடமையாகும்; திரு. தஹநாயகா கடைப்பிடிக்குங்கொள்கை முஸ்லீம்கல்வியின் தரத்தைக் குறைத்துவிடும்; எல்லாச்சமூகத்தினரும் சமாதானமாகவாழ்ந்து ஐக்கியஇலங்கையைப் பலப்படுத்துவதற்கு உழைக்கவேண்டுமென்பதே எனதுவிருப்பமாகும்" என்று மூதூர்ப்பிரதிநிதியான ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலிஅவர்கள் சென்ற 11-ந்திகதியன்று மூதூர் ஜூனியர்பாடசாலைப் பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தின் விசேஷகூட்டம்ஒன்றில் பேசியிருக்கின்றார்.

### மட்டக்களப்பில் பாதுகாப்பு ஏற்பாடு

திரிகோணமலையிலே சமீபத்தில் நடைபெற்ற கலவரங்களை மனத்திற்கொண்டு அவைபோன்ற வகுப்புக்கலவரங்கள் மட்டக்களப்பிலும் நடைபெறுவண்ணம் தடுத்துவைக்கப் பொலிசாரும், இராணுவத்தினரும் பலமான பாதுகாப்புநடவடிக்கைகள் எடுத்திருக்கின்றார்கள். ஏதும்கலவரம் ஏற்படுமிடத்து அதனை அடைக்கிவைக்க 200 இராணுவவீரர்கள் தயாராய் அங்குள்ள அரசினர் ஆசிரியகலாசாலையில் முகாமிட்டிருக்கிறார்கள். அதனால் ஆசிரியமாணவர், மாணவிகள் தங்கள் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கிறார்கள். முகாம் கலைக்கப்பட்டபின்னரே இவர்கள் கலாசாலைக்குத் திரும்புவார்களெனத் தெரியவருகிறது. பட்டினவீதிகளில் பொலிஸ்காவல் பலமாக்கப்பட்டுச் சகல சந்திகளிலும் நான்குபொலிசார் நிறுத்தப்பட்டுள்ளனர். இரவிலும்பொலிசார் தீவிரகாவல் செய்து, நடுச்சாமத்தின்பின் பட்டினத்துள்பிரவேசிக்கும் வாகனங்களையெல்லாம் பரிசோதனைசெய்து வருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

## செனற்றர் அழைக்கின்றர்

"தற்போதைய நெருக்கடியானசமயத்திலே முன்வந்து அரசியல்அழிவிலிருந்து தமிழர்களைக் காப்பாற்றவேண்டியது திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் கடமையாகும். தமிழருக்குஏற்பட்டுள்ள கஷ்டங்களைப்பற்றிப் பிரதமருடன் அவர் பேச்சுவார்த்தைநடத்தித் தமிழருக்குரிய அரசியல்உரிமைகளைப் பெறவேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவரின்கருத்துகளுக்கு அரசாங்கம் கவனமாகச் செவிசாய்த்து, சிங்களவரினதும், தமிழரினதும் நலனுக்குகந்த நடவடிக்கைகளை எடுக்குமென்று எனக்கு நம்பிக்கைஉண்டு. தமிழரின் மாபெருந்தலைவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியவர்களின் அரசியல்இலட்சியம் தமக்கு இருக்கிறதுஎன்பதை நிரூபிக்க அவருக்கு இது ஒரு அருமையான சந்தர்ப்பம். அரசியல் அழிவிலிருந்து தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக அவர் பிரதமருடன் சமாதானப் பேச்சுவார்த்தைநடத்தி ஓர்உடன்பாட்டுக்கு வரவேண்டும். தமது திறமைக்கும், வன்மைக்கும், அரசியல் அனுபவத்திற்கும் ஏற்ப அவர் எம். ஈ. பி. அரசாங்கத்தில் ஓர் பதவி ஏற்கவேண்டும்."

**செனற்றர் பி. எம். ஜெயசேன**

## பாத்தியதைகளைப்பாதுகாக்கும்உரிமை

"சிங்களர், தமிழர், முஸ்லீம்கள் ஆகிய மூன்று சமூகங்களையுஞ்சேர்ந்த ஒவ்வோர்பிரசைக்கும் தங்கள் பாத்தியதைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமைஇருக்கிறது. எல்லா ஜனநாயக நாடுகளிலும் இந்தஉரிமை வழங்கப்பட்டிருக்கிறது. எங்கள்உரிமைகளை நாங்கள் பாதுகாத்துக்கொள்ள முயலும்போது நாங்கள் குரோதத்தைவளர்ப்பதாக மற்றவர்கள் தப்பார்த்தம் செய்துகொள்ளுகிறார்கள்."

**ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி,**
மூதூர் எம். பி.

## எசமான்கள் அல்ல

"இலங்கைவாழ் முஸ்லீம்களுக்கு இன்றைய அரசாங்கம் கூடுதலான சலுகை அளித்துவருவதாகச் சொல்லப்படுகிறது. எசமானனே தன் கீழுள்ள ஊழியனுக்கு—அடிமைக்குச் சலுகை செய்வான். சிங்களவர்கள் எங்கள் எசமானர்கள் அல்ல. ஆகவே, எங்களுக்குச் சலுகையளிக்கத் தேவையில்லை. நாமும் எல்லாஉரிமைகளும் நிரம்பப்பெற்ற இந்நாட்டுமன்னர்கள்."

**ஜனுப் மன்சூர் மௌலானா,**
மன்னார்.

## எரிகிறநெருப்புக்கு எண்ணெய்

"இந்நாட்களிலே சிலதனிப்பட்டபேர்கள் சிறுபான்மையினருக்கும், சிங்களவருக்குமிடையே பிளவை உண்டுபண்ணுவதற்கு அரசியல் மேடைகளைப் பயன்படுத்துகின்றனர். காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகா அவர்கள் சிறுபான்மையினரைச் சிங்களவருடன் ஐக்கியப்படுத்தப் பெரும் முயற்சிஎடுத்து அதில் வெற்றியுற்றார். சிறுபான்மையினரைப் பெரும்பான்மைச் சமூகத்துடன் ஐக்கியமாக இணைத்துவிடக்கூடிய முறையில் இந்நாட்டின்பொருளாதார அபிவிருத்தித்திட்டம் இடப்பட்டிருந்தது. ஆனால், இப்பொழுது ஏற்பட்டுள்ள புதியசூழ்நிலையில் இந்நாட்டுமக்களிடையே சமய, வகுப்புவாதக் கூச்சல்களாலும், தகராறுகளாலும் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. பொறுப்பற்ற அரசியல்வாதிகள் எரிகிறநெருப்புக்கு எண்ணெயஊற்றுகின்றனர். மக்கள் இத்தகையநடவடிக்கைகளை நிறுத்துமாறு கூக்குரலிட்டுக் காலஞ்சென்ற எனது தந்தையார் திட்டமிட்டபடி ஐக்கியமாகவேண்டும்."

**திரு. டட்லி சேனநாயகா**

## குழப்பத்தில் ஆழ்த்திவிட்டவை எவை ?

"தற்கால அரசியலும், கல்விமுறையும் நாட்டிலே சமயப்போட்டி, வகுப்புவாதஉணர்ச்சி, பிரிந்துவாழச்செய்யும் பிளவுமுதலியவைகளை உண்டுபண்ணி, மக்களை ஐக்கியப்படுத்துவதற்குப் பதிலாக நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்தியும்விட்டன. சமயக் கொள்கைகளையும், அரசியற்கொள்கைகளையும், கல்விமுறைகளையும் தாக்கிப்பேசுகிறவர்கள் தேசத்துரோகிகளாக மதிக்கப்படவேண்டும். அவர்களை ஒழித்துக்கட்டுவதற்குரியநேரம் வந்துவிட்டது."

**திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல,**
உள்நாட்டு உதவிமந்திரி.

## முதலிடம் யாருக்கு ?

"சுகாதாரமந்திரி விமலா விஜயவர்த்தன தனதுஉறவினர்களுக்கும, சிநேகிதர்களுக்குமே ஆயுர்வேத ஆலோசனைச்சபையில் முதலிடம் கொடுத்திருக்கிறார். இந்தச்சபைக்கு நியமிக்கப்பட்டிருப்பவர்கள் எல்லோரும் களனித்தொகுதியைச் சேர்ந்தவர்கள்என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகவே, திரு. ஆர். ஜி. சேனநாயகா இத்தொகுதியைக்கைவிட்டு இராசினாமாச் செய்யுமிடத்துச் சுகாதாரமந்திரிக்கு விருப்பமான ஓர்அபேட்சகரையே இவர்கள் ஆதரிப்பார்கள்என்பதில் சந்தேகமில்லை."

**திரு. கே. ஜி. பி. ஜயதிலகா,**
காலி.

## சந்தர்ப்பம் கிடைக்கவில்லை

"ஒருநாட்டுமக்களில் ஒருசாரார் ஏனையோருடன் விரோதமபாராட்டிவருவாராயின் எந்தஒருநாடும் முன்னேறமாட்டாது. ஸ்ரீலங்காவின்பிரசைகள் ஒவ்வொருவரும் தனது சாதி, மதம் எதுவாயிருந்தபோதிலும் ஏனையவர்களின் கொள்கைகளையும் சகிப்புத்தன்மையுடன் கௌரவித்தல்வேண்டும். பிணக்குகளைத் தீர்த்துவைப்பதிலேயே இத்தனைகாலமும் என்துநாட்கள் கழிந்துவிட்டன. இந்நாட்டின் பிரதமர்என்றமுறையில் இந்நாட்டுமக்களின் முன்னேற்றத்துக்காக எந்தஒருதிட்டத்தை வகுத்துக்கொள்வதற்கும எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை."

**பிரதமர் பண்டாரநாயகா**

## போதனசிரியரின் பொன்மதிகள்

"ஒருவரோடொருவர் போட்டியிடும் வழக்கத்தைவிடுத்துக் கிராம அபிவிருத்தியில் கிராமங்களிடையே பலவிதமான போட்டிகளையும் ஏற்படுத்துதல் தற்காலப் பொருளாதார, கலாசார, சமூக முன்னேற்றங்களுக்குப் பெருந்தொண்டு ஆற்றுவதாகும். எமது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துவரும் இந்நாளில் நாம் எமது கற்பகதருவான பனைமரங்களைவெட்டி வீடுகட்டுவதில் கவனஞ்செலுத்துகிறோமேயொழிய அவைகளை நட்டு வளர்ப்பதில் அதிகம் அக்கறை செலுத்துவதில்லை. நீர்வளத்தால் நிலவளங்குறைந்த இக்குடாநாட்டில் உள்ளார் இனிமேலும் அரசாங்கஉத்தியோகங்களை அதிகம் எதிர்பார்க்காது சுயதேவைப்பூர்த்தியில் போதியகவனம் எடுக்கவேண்டும். நம்நாடு பருத்தி வளர்ப்பதற்கேற்ற சுவாத்தியத்தை உடையதாய் இருக்கிறது. பருத்தியை வளர்த்துப் பஞ்சைஎடுத்து அரசாங்கத்திற்கே அதனை விற்கலாம். மணற்பாங்கான இடங்களில் 'கஸ்கொட்டை' மரங்களை நட்டு அதனல் அதிகம் பயனடையலாம். இவற்றால் நமதுசமுதாயம் உழைப்பாளிகள் சமுதாயமாக மாறுவதுடன் அடிமைமனப்பான்மை நீங்கிப் பொருளாதார சுபீட்சம்நிரம்பிய வாழ்க்கை நடத்தமுடியும்."

**திரு. வி. கந்தப்பு,**
பலாலி அரசினர் ஆசிரியகலாசாலைப் போதனசிரியர்.

---

## மாதகல்துறை
## பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

மாதகல்துறை, பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள் இவ்வருடம் மாசிமாதம் 4-ந்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறுகிறது. 17-ந்திகதி காலை அதிசிறப்பாக முடிவாகும்.

16-ந்திகதி சாயந்தரம் 7மணியளவில் பரிசுத்த லூர்துநாயகியின் திருச்சுரூபம் சென் தோமஸ் ஆலயத்திலிருந்து ஆடம்பரவைபவங்களுடன் மெழுகுவர்த்தித் தீப அலங்கார சுற்றுப்பிரகாரமாகத் திருக்கெபிசெல்லவே அங்கு வேஸ்பர்என்னும் மாலை ஆராதனை பாடப்பெற்றுச் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படும். 17-ந்திகதி சாயந்தரம் திருத்தலத்தில் விருந்துகொடுபடும்.

[யாத்திரிகட்கேற்ற சகலவசதிகளுமுண்டு]

கட்டளைக்குரவர், மாதகல்.

---

# குடும்ப சிக்கனவாழ்க்கை

பொதுவாகச் சகலகுடும்பங்களிலும் பணம்சம்பாதிப்பவர்கள் பெரும்பாலும் ஆண்களாகவே இருக்கின்றார்கள். ஆனால், இப்பணத்தில் பெரும்பகுதியைப் பெண்களே செலவிடுகிறார்கள். சிலகுடும்பங்களில் வருவாய்முழுவதும் பெண்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. அதைஎவ்வாறு செலவிடவேண்டுமென்பதை அவர்களே முடிவுசெய்கிறார்கள்.

எனினும், எல்லாப்பெண்களும் தங்கள்கைக்குவரும்பணத்தை முறையாகவும், செட்டாகவும் செலவுசெய்கிறார்களென்று சொல்லமுடியுமா? முடியாது. கலாசாலைகளில் நாம்பொருளாதாரசாஸ்திரம் படிக்கும்போது ஆசிரியர்கள் பணத்தைப்பற்றி நமக்குச் சுலபமாகவிளங்காத எத்தனையோ சிக்கலான அம்சங்களை விளக்கிக்கூறுகிறார்கள். ஆனால், பணத்தை முறையாகச் செலவிடும்விதத்தை எந்தஆசிரியரும் விளக்குவதில்லை. இதுநாம் எமது அனுபவத்தில் எமது புத்தி சாதுரியத்தைக் கொண்டு அறிந்துகொள்ளவேண்டிய விஷயம்.

சிக்கனவாழ்க்கையின் சிறப்பை நாம் எமது பெற்றோர்களிடமிருந்தோ, எமது உறவினர்களிடமிருந்தோ, அல்லது சிநேகிதிகளிடமிருந்தோ அறிந்திருக்கலாம். ஆனால், அத்தகைய வாழ்க்கைநடத்தி, அதன் சிறப்பைக் காணவேண்டுமென்ற விருப்பமும், திடசங்கற்பமுமில்லாதவர்களுக்கு அவ்வறிவினல் யாதொருபயனுமில்லை. ஒரு குடும்பத்திலே வாழ்க்கைக்குத்தேவையான பணத்தைச்சம்பாதிப்பவர் கணவனுகவோ அல்லது மனைவியாகவோ இருக்கலாம். அஃதெப்படியிருப்பினும், சம்பாதிக்கப்பட்ட பணத்தை முறையாகச்செலவிடுவதுதான் முக்கியமாகும். ஏனென்றால், பணத்தை முறையற்றவிதமாகச் செலவிட்டால் அப்பணத்தின் முழுப்பெறுமதியையும் நாம் அடையமுடியாது. அத்துடன் அதைச் சம்பாதிக்க நாம்உழைத்தகடினஉழைப்பும் வீணாகிவிடும்.

வருவாய்க்குள் செலவுசெய்யும் வாழ்க்கைமுறையை மேற்கொள்ளாத எப்பெண்ணும் தானே அல்லது தனது கணவனே சம்பாதித்தபணத்தை முறையாக உபயோகித்தவளாகமாட்டாள். இல்லறவாழ்க்கையில் தம்பதிகளுக்குள் வேற்றுமைகளைவளர்க்கக் கூடிய முக்கியகாரணங்களில், பணம் ஒன்றுகுமென்று சொல்லத் தேவையில்லை. ஒருகுடும்பத்திலே மனைவி பணத்தை ஊதாரித்தனமாகச் செலவிடுவதனலோ அல்லதுமுறையாகச்செலவிடாததினலோ சிலசமயங்களில் தம்பதிகளுக்குள் கடும்வாக்குவாதங்கள் நடைபெறுவதுண்டு.

ஒருகுறிப்பிட்ட பட்டுச்சேலையை வாங்கினல், குடும்பவரவுசெலவுத்திட்டம் குறைந்து கடன்படநேரிடுமென்று தெரிந்தும்பிடிவாதமாக அந்தஊதாரித்தனமானசெலவில் ஈடுபடும்மனைவியால் தம்பதிகளுக்குள் சச்சரவுகள்மூளுவதை நாம்சர்வ சாதாரணமாகக் காணலாம். வருவாயை மீறிச் செலவுசெய்வதே தவறு. அதிலும் கடன்படும்படியாக அநாவசியச்செலவில் ஈடுபடுவது மன்னிக்கமுடியாத குற்றமாகும். பட்டுச்சேலை நமது ஆசையை எவ்வளவுதான் கிளறிவிட்டபோதிலும், இத்தகையசந்தர்ப்பங்களில் அதை அடக்குவதே விவேகம்.

குடும்பநிர்வாகத்திலே பணநிர்வாகம் மிகமுக்கியமானது. இல்லறவாழ்க்கையின் வெற்றியே பணத்தைச் சரியாக உபயோகிப்பதிற்றான் பெருமளவுக்குத் தங்கியிருக்கின்றதெனலாம். ஆகலின், குடும்பதலைவர் தன்மீது பரிபூரணநம்பிக்கைவைத்து, தன்னிடம் ஒப்படைக்கும் பணத்தை முறையாகச்செலவிட்டு, இல்லத்தில் அமைதியும், ஆனந்தமும், ஒற்றுமையும், சௌஜன்னியமும் நிலவச் செய்வது மனைவியின் தலையாய கடமையாகும்.

> **மௌனமே மங்கையருக்கு மேன்மையான மணியாரம். ஆனல், அணிந்தால் அல்லவோ!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பாப்பரசரும் பிரித்தானிய மந்திரியும்

பரிசுத்தபாப்பரசர் அன்று சனிக்கிழமை பிரித்தானியஅரசின் வெளிநாட்டு மந்திரியான திரு. செல்வின் லொயிட்அவர்களுக்கு ஓர் அந்தரங்க பேட்டியளித்தபோது, "பொதுநல" கருமங்கள் சம்பந்தமாய் உழைக்கமுன்வருமாறு அழைக்கும்போதெல்லாம் பிரித்தானியமக்கள் அதற்கிசைந்து காண்பிக்கும் தைரியத்தையும், செய்யுந்தியாகத்தையும் புகழ்ந்து பாராட்டலாயினர். தமக்குப் பெரிதும்சந்தோஷத்துக்குக் காரணமாய்ப் பரிசுத்தஸ்தானத்துக்கும், பிரித்தானிய அரசாங்கத்துக்குமிடையேநெடுங்காலமாக இருந்துவருகின்ற இதயபூர்வமான இராசியஉறவுபற்றிப் பரிசுத்தபிதா வியந்துபேசலாயினர்.

## எகிப்துக்குப் பாப்பரசரின் ஸ்தானிகர்

பரிசுத்தஸ்தானம் எகிப்துக்குப் பாப்பரசரின் புதியஸ்தானிகராக ஓர்இத்தாலியரான ஒடிஅதிமேற்றிராணியாரை நியமனஞ்செய்திருக்கிறது. இவர் 1948-ம் ஆண்டுமுதல் ஜெருசலேம், பலஸ்தீன், ஜோர்தான், சைப்பிறஸ் ஆதியவற்றிற்கு அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாய் இருந்துவந்தார். எகிப்திலே இதற்குமுன் பாப்பரசரின்ஸ்தானிகராய் இருந்துவந்த ஓர்பெல்ஜியரான டே ஜொங்கி டி ஆர்டோயி அதிமேற்றிராணியார் சுகத்தாழ்வுற்றிருந்தபோது, அவரிடமாக இவர்சிலகாலம் அங்குதற்காலிகமாகக் கடமைபார்த்திருக்கின்ருர். இவரிடமாக ஜெருசலேம், பலஸ்தீன், ஜோர்தான், சைப்பிறஸ்ஆதியவற்றின் புதிய அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாக மற்ருேர் இத்தாலியரான சென்ஸிஅதிமேற்றிராணியார் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர்.

## பாப்பரசரின் பழையகலாசாலை

பரிசுத்தபாப்பரசர் சிலதினங்களின்முன் ரோமைநகரினூடாகக் காரில்சென்றவிடத்து, 500-ம் ஆண்டுநிறைவுவிழாவைக் கொண்டாடுகின்ற தமது பழையகலாசாலையாகிய கப்பிருனிக்காகல்லூரிக்கு விஜயஞ்செய்தபோது, இற்றைக்கு 60 வருடங்களின்முன்னே தாம் நித்திரைசெய்யப் பிரயோகித்த அறையை மறுபடியும் தரிசிக்கலாயினர். அதனுடன் பாப்பரசர் சம்பந்தப்பட்டிருந்ததை ஞாபகப்படுத்தும் மாபிள்கல்சாசனம்ஒன்று அதில்இருக்கின்றது. தற்போது இந்தஅறை தரிசகர்களான மேற்றிராணிமார் தங்கியிருக்கும் அறையாகஇருந்துவருகிறது. மரியன்னையின்வருட ஆரம்ப விழாவைமுன்னிட்டு இதற்குமுன் அவர் கடைசியாகரோமைநகரைத் தரிசித்தது1953-ம்ஆண்டுமார்கழி மாதம் 8-ந்திகதியன்ருகும். கப்பிருனிக்காகல்லூரி ரோமைநகரிலே வர்த்தக-கைத்தொழிற் புழக்கமானபகுதியின்மத்தியிலேஅமைந்திருக்கிறது. இதிலிருந்து சற்றுத் தூரத்திலேயே பாப்பரசர்பிறந்தமனை இருக்கிறது. தற்சமையம் இது முற்ருகத் திரும்பக்கட்டப்பட்டிருக்கிறது.

## போலாந்தும் பொதுத்தேர்தலும்

மிகப்பெரும்பான்மையாய்க்கத்தோலிக்கராகவுள்ள போலிஷ்மக்கள் அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தலிலே தவறற்றநிர்ணயத்துடன் திரு. கோமுல்காவின் கம்யூனிஸ்தஆட்சியையே திரும்பவும் அதிகாரபதவிக்குக் கொண்டுவந்திருக்கிருர்கள். தங்கள் மேற்றிராணிமார் காட்டியவழியைப் பின்பற்றியே அவர்கள் இவ்விதம்செய்தார்கள். ஆயினும், இதுசெயல் கம்யூனிஸத்துக்குச் சரணகதிஅடைவதன்று. ஆனல், தங்கள்நாட்டிலே ருஷியாவின்பிடியை விடுவித்துவிட்டதும், திருச்சபை சுதந்திரமடைய வழிபண்ணிவிட்டதும், ஆட்டங்கண்டிருக்கும் நாட்டின் பொருளாதாரநிலையை மீளப்பலப்படுத்துவதாக வாக்குறுதிஅளித்திருப்பதுமான ஓர்அரசாங்கத்தில் நம்பிக்கைதெரிவித்தே அதற்கு வாக்களிக்கப்படலாயிற்று. திரு. கோமுல்காவுடையதைக் காட்டிலும் மற்றெந்த ஒருஆட்சியும் இவைகளையெல்லாம் சாதித்திருக்கமுடியாது. பெரும்பான்மையான அங்கத்தவர்களுடன் ஓர் கம்யூனிஸ்தஅரசாங்கம் மீளவும் வராமற்போகுமிடத்து, ருஷியாவின் எதிர்நடவடிக்கைக்குத் தான் உத்தரவாதிஅல்ல என்று திரு. கோமுல்கா தெரிவித்துவிடுத்த கடைசிவேண்டுகோளும் தேர்தலில்கலந்து அவரைஆதரிக்க ஓர்தூண்டுகோலாயிற்று. தேர்தலுக்கு அனுமதிக்கப்பெற்ற கத்தோலிக்கஅபேட்சகர்களும் வெற்றிபெற்ருர்கள்.

## முதற்பரிசில்பெற்ற குருவானவர்

வானொலிவார விழாக்கொண்டாட்டத்தின்போது அகிலஇந்திய வானொலியால் ஒழுங்குசெய்யப்பட்டு இந்திய சர்வகலாசாலைகளினிடையே நடைபெற்ற ஆங்கில பேச்சுப்போட்டியில் தலைசிறந்த பேச்சாளராக நாகப்பூர் சர்வகலாசாலையைச்சேர்ந்த வண. விக்றர் ரேச்சாசுவாமியார் தீர்மானிக்கப்பெற்றிருக்கின்ருர்.இவர்பம்பாய்ப் பிராந்தியத்தின் பிரதிநிதியாகச் சென்றிருந்தார். இவருக்கு நூறு ரூபாபெறுமதியுள்ள புத்தகப்பரிசில் வழங்கப்படலாயிற்று. ஈருந்த போட்டியில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான ஆரம்பபேச்சுப்போட்டிகள் ஒவ்வோர்பிராந்தியத்திலும் ஏற்கனவே நடைபெற்றிருந்தன. விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயம், "இந்தியாவிலே உயர்தர கல்வி திறமைவாய்ந்த மாணவர்களுக்கே பயிற்றப்படவேண்டும்"என்பதே. வண. ரேச்சாசுவாமியார் இதனைஆட்சேபித்துப் பேசலாயினர்.

## கத்தோலிக்கரான புதியமந்திரியார்

திரு. ஹறோல்ட் மைக்மில்லன் அவர்களைப்பிரதமராகக்கொண்ட பிரித்தானிய புதியஅரசாங்கத்தில் 49 வயதுடையவரான பேர்த்தின் ஏள்பிரபு இராச்சிய மந்திரியாய் நியமனம்பெற்றிருக்கின்ருர். யுத்தத்தின்பின்னர் கன்சர்வேற்றிவ் கட்சி அரசாங்கத்தில் மந்திரிபதவி வகித்துள்ள முதலாவதுகத்தோலிக்கர் இவரே. ஆயினும், யுத்தத்தின்முன்னரும், அதற்குப்பின்னரும் தொழிற்கட்சிஅரசாங்கத்தில் ஒருதொகையான கத்தோலிக்கர் மந்திரிமாராய் இருந்துவந்தனர். இவர்களில் பேக்கென்ஹாம்பிரபுவும், திரு. றிச்சேட் ஸ்ரோக்ஸ் அவர்களும் முக்கியமானவர்கள். முன்னர் ஸ்ருதலன்பிரபுவென அறியப்பெற்றிருந்த புதியமந்திரியார் 1919-ம்ஆண்டுமுதல் 1933-ம் ஆண்டுவரை சர்வதேசசங்கத்தின் பிரதமகாரியதரிசியாயும், பின்னர் ஏழுவருடகாலம் ரோமைநகரிலே பிரித்தானியஅரசின் ஸ்தானிகராயும் விளங்கியிருந்த பேர்த்தின் பதினுருவது ஏள்பிரபுவின் ஏகபுதல்வர். இவர் 1951-ம்ஆண்டு தமது தந்தையாரினிடமாகப் பதினேழாவது ஏள்பிரபுவாயினுர். இவர்தந்தையார் 1903-ம்ஆண்டு புரொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்துகொண்டார். பிரித்தானிய சாம்பிராச்சியத்திலே குடியேற்றநாடுகள் பலவற்றிற்கும் சுதந்திரமும், சுயவரசும் அருளுவதற்கான தீவிரநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்ற சரித்திரபூர்வமான ஓர்காலத்திலே புதியமந்திரியார் பிரித்தானிய அரசாங்கத்தின் குடியேற்றநாட்டுமந்திரி காரியாலயத்தில் கடமைபார்க்கத் தொடங்கியிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

## மாணவர்களின் திருயாத்திரை

ஹங்கேரியிலே உபத்திரவப்படும்மக்களுக்கு அனுதாபங் காண்பிக்கும்முகமாகச் சர்வகலாசாலை மாணவர்களும், உயர்தர கலாசாலை மாணவர்களுமாக 300 பேர் போர்த்துக்காலிலே லிஸ்பன்நகரிலிருந்து பாத்திமாவரையிலுள்ள நூறுமைல்தூரத்தையும் கால்நடையாகநடந்து அத்திருசேத்திரத்துக்கு யாத்திரையாகச் சென்ருர்கள். காலையில் திவ்விய பூசை கண்டும், லிஸ்பன்நகரின் பத்திறியாக்குவான கருதினல் செறெய்ஜீரு ஆண்டவரால் அருளப்பட்ட பெரியமரச்சிலுவையைப் பெற்றுக்கொண்டும் தங்கள் நாலுநாட்பிரயாணத்தையும்இவர்கள் தொடக்கினுர்கள். லீறியாவின்மேற்றிராணியார் பாத்திமாவிலிருந்து சிலமைல்தூரத்திலே இந்த மாணவயாத்திரிகர்களை வரவேற்று, பாத்திமாஆலயத்திற்குச்சமீபமாய்க் காட்சிகள்அருளப்பெற்ற இடத்திலுள்ள சிற்ருலயம் வரையில் அவர்களுடன் கூடச் சென்ருர். அங்குபோய்ச்சேர்ந்ததும் திவ்வியபூசை நிறைவேறியது.

## அர்ச். ஜோண்பொஸ்கோவின் நண்பர்

அர்ச். ஜோண்பொஸ்கோவின் உற்றசிநேகிதரான வண. ஈ. யூஜின் செறியாசுவாமியார் தமது 86-ம்வயதிலே தூறின்நகரிலுள்ள சலேசியன்சபையாரின் தாய்மடத்தில் சமீபத்திலே காலஞ்செல்லலாயினர். ஓர்பாலியராக இருந்தபோது இவர் வருங்காலஅர்ச்சியசிட்டரான ஜோண்பொஸ்கோவைச் சந்திக்கலாயினர். எழுபது வருடங்களுக்குமேல் இவர் சலேசியன்சபையில் ஓர்குரவராய் இருந்திருக்கின்ருர். ஜோண்பொஸ்கோவின் சீவியசரிதையின் பத்தொன்பதுகாண்டங்களில் ஒன்பதையும், சலேசியன்சபைச் சரித்திரத்தில் நான்குகாண்டங்களில் நான்கையும் இவரேஎழுதலாயினர்.

## துருக்கியும் வத்திக்கானும்

வத்திக்கானுக்குத் தனதுஇராசியப்பிரதிநிதிஒருவரைத் துருக்கி அனுப்பவேண்டுமென்று இஸ்தன்பூல்நகரில் பிரசுரமாகும் 'ரான்'என்ற சுதந்திரபத்திரிகை எழுதியிருக்கின்றது. "வத்திக்கான் புறக்கணித்துப் பராகண்டிதமாய் விடப்படமுடியாத ஓர் பலம்"என்று அப்பத்திரிகை கூறுகின்றது. மிகப்பெரும்பான்மையாய் ஓர்முஸ்லீம்நாடாகிய துருக்கியின் மொத்தக்குடிசனமாகிய 2 கோடியே 10பேரில் ஏறக்குறைய 40,000 பேரே கத்தோலிக்கர். துருக்கியின்அரசியல்திட்டம்சமய சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளிக்கின்றது. பரிசுத்தபிதா சமீபத்திலே இஸ்தன்பூல்நகரின் மேயருக்குப் பேட்டியருளலாயினர்.

---

● இதுவரை அணுக்குண்டு, சலவாயுக்குண்டு முதலாம் அணுச்சக்தி ஆயுதங்களைத் தயாரிப்பதிலே ஈடுபட்டுவந்த அமெரிக்கஅரசாங்கம் இப்போது தற்காப்புக்குப் பயன்படக்கூடிய அணுச்சக்தி ஆயுதங்களைச்செய்வதிலே தீவிரகவனம் செலுத்திவருவதாக அமெரிக்க அணுச்சக்திக்கம்மிஷன் தெரிவித்திருக்கின்றது.

● புதிதாகப் பிரான்சிய உல்லாசப் பிரயாணக்கப்பல்ஒன்று சமீபத்திலே கட்டப்படவிருக்கிறது. 'பிரான்ஸ்' என்று நாமமிடப்படவிருக்கின்ற இந்தக்கப்பல் 55,000 தொன்நிறைகொண்டதாயும், மணித்தியாலம் 30 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியதாயும், வருடம்ஒன்றுக்கு 75,000 பிரயாணிகளை ஏற்றிச்செல்லத் தக்கதாயும்இருக்குமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசிமாதம்

**பொதுக்கருத்து:** குருத்துவஅழைத்தலை விருத்திசெய்யும் ஸ்தாபனங்களுக்கு விசுவாசிகள்உதவிசெய்யுமாறு வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** வடஆபிரிக்காவிலே திருச்சபைசெயலாற்ற அமைதியானசூழ்நிலைஏற்படுமாறு மன்ருடிக்கொள்வது.


# சத்தியவேத பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
மாசி மாதம் 14-ந் திகதி


## பகிஷ்காரம்

தமிழ்பேசும் மக்களிடையே எழுந்துள்ள சிங்கள ஸ்ரீ எதிர்ப்பானது இரத்தினபுரி, தெல்தேனியா, மதவாச்சி, குருநாகல், கண்டி முதலாம் இடங்களிலே தமிழர்களையும், தமிழர்கடைகளையும் பகிஷ்கரிக்கும் இயக்கம் ஒன்றைச் சிங்களவருள் ஓர்பாலாரிடையே பிறப்பித்திருக்கின்றது. அங்கெல்லாம் "சிங்கள ஸ்ரீ விரோத தமிழர் கடைகளைப் பகிஷ்கரியுங்கள்" என்ற சுலோகம் கோஷிக்கத் தொடங்கியிருக்கிறது. யாழ்ப்பாணத் தமிழர்களின் கடைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாகப் பயமுறுத்தும் துண்டுப்பிரசுரங்களைத் "துட்டகைமுனு தாருண பெரமுனே" என்ற இரகசியச்சங்கம் வெளியிட்டிருக்கின்றது. இதுவிஷயமாய் இரத்தினபுரியிலே முன்சொன்னஅட்டைகளைத் தாங்கிக்கொண்டு நடைபெற்ற பகிஷ்கார ஊர்வலம் ஒன்றிலே அங்குள்ள டிஸ்திறிக்கோட்டுத் தொலுக்கு முதலியாரும், பிரதமலிகிதரும் கலந்துகொண்டார்களாம் என்பதை அறியவருமிடத்து, இவர்களிலே—அந்தத் "துட்டகைமுனு தாருண பெரமுனே" யாரிலே தமிழ்மக்கள் கோபமும், குரோதவிரோதமுங்கொள்ள இடமேயில்லை. ஏனெனில், எய்தவனிருக்க அம்பைநோவதில் பயனேயில்லை. இத்தகைய பகிஷ்காரத்தில் இவர்கள்இறங்குவதற்கு வழிதிறந்துவிட்டவர்களிலேயே அவர்கள் மனம் நோகவேண்டும். ஆம், 'சிங்களம்மட்டும்' என்ற சட்டத்தை ஆதரித்தவர்களும், அரங்கேற்றியவர்களுமே தமிழர்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்துக்கெல்லாம்அடிகோலியவர்களெனில் மிகையாகுமா? கல்வி மந்திரி போன்றவர்களின் போக்கிலும், செயலிலும், பேச்சிலும் இந்தப்பகிஷ்காரம் பிரதிபலிக்கவில்லையென்று எவராலும் துணிந்து சொல்லமுடியுமா? ஆனால், இந்தப்பகிஷ்காரம் எதில் போய்முடியுமென்பதை — இன்னும் எத்தனை பகிஷ்காரங்களைக் கொண்டுவருமென்பதை — அப்போது இலங்கையில் ஏற்படக்கூடிய அல்லோலகல்லோலநிலைமையாதாகுமென்பதை இவர்கள் ஆழமாகச் சிந்தித்திருப்பார்களாயின் இந்த இயக்கத்துக்கு வழிதிறந்து விட்டிருக்கமாட்டார்களென நிச்சயமாகக் கூறலாம். இன்று பௌத்தர்கள் தானே பௌத்தர்களை—பௌத்தகுருமார் தானே பௌத்த குருமாரை—ஆயுர்வேத கல்லூரிமாணவர்கள் தானே ஆயுள்வேதகல்லூரியை—பாடசாலைப் பிள்ளைகள் தானே பாடசாலைகளை — அரசாங்ககட்சியைச் சேர்ந்தவர்கள்தானே அக்கட்சியைச்சேர்ந்தவர்களைப் பகிஷ்கரியாமல் பகிஷ்கரிக்க முனைந்து நிற்கின்ருர்கள். கடைசியாகச் சிங்களஸ்ரீயை எதிர்த்துத் தங்கள் மோட்டர்வாகனங்களில் தமிழ் எழுத்துப் பொறித்துள்ளவர்கள் மீது வழக்குத்தொடரப் பிரதமரும், அவரோடு சேர்ந்தவர்களும் தீர்மானித்திருப்பதிலிருந்து புற்றிலிருந்து ஈசல்கள் புறப்பட்டவாருய் எத்தனையோ பகிஷ்காரங்கள் தலையெடுக்குமென்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளாமை வருந்தத்தக்கதே.

---

## சூ-என்-லாய்
### யாழ்ப்பாணம் வந்திருந்தால்!

ஐயா பத்திராசிரிய!

சமீபத்திலே இலங்கைக்கு விஜயம் செய்த சீனப்பிரதமர் சூ-என்-லாயை யாழ்ப்பாணத்துக்கும் வந்து போகும்படி யாழ்ப்பாண நகரபிதா அழைப்புவிடுத்திருந்த காரணம் யாதோ? ஓர்சமயம் இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களுக்கெல்லாம் மக்கள்ஐக்கியமுன்னணி அரசாங்கம் விளைத்திருக்கும் கெடுதிகளை அவருக்கு எடுத்துக் காட்டுவதற்கா? அன்றேல், வேறுயாதும் அந்தரங்கநியாயம் உளதா?

இந்தச் சீனப்பிரமுகர் தனதுநாட்டில் ஜனநாயகத்தைச் சவக்குழியிலே புதைத்துவிட்டு, சமத்துவத்தைச் சாக்கடையில் தள்ளிவிட்டு, சகோதரத்துவத்துக்குச் சமாதிகட்டிவிட்டு, ஒற்றையாட்சியை நிலைநாட்டிவிட்டு நிம்மதியாக நாடு சுற்றுபவர். இப்பேர்ப்பட்டவரிடம் நியாயம், நீதி என்பன குதிரைக்கொம்பன்றே! இவர் யாழ்நகர்வந்தால் இத்தீவில் தமிழினத்தின் சமத்துவஉரிமைகள் பறிபட்டிருப்பதை அவரிடம் கூறலாம், அன்றேல் அவர்மூலம் உலகுக்குத் தெரிவிக்கலாமென்று நகரபிதா எண்ணியிருந்தால் அது மரந்தாவும் மந்தியிடம் வாயில் போட்டவாழைப்பழத்தை எதிர்பார்த்ததுபோலத்தான் முடிந்திருக்கும்.

மேலும், அன்றுதொட்டு இன்றுவரை இலங்கைக்கு விஜயஞ்செய்துபோன அரசியற்தலைவர்கள் பலர் உளர். இவர்களில் எவருமே விஜயஞ்செய்யாத யாழ்நகருக்கு இந்தச் சீனப்பிரமுகர்தான் முதன்முதலாக இங்கு விஜயஞ்செய்யவேண்டுமென்று யாழ்நகரபிதா விருப்பங்கொண்டவர்போல் அழைப்பு விடுத்திருப்பாராயின் அஃது பெரும்பேதமையென்றேசொல்லவேண்டும். சீனத்து மக்களாலும், கிழக்கிலே வதியும் மக்களாலும் அனுபவமிக்க அரசியல்வாதி, நல்ல ஓர்முற்போக்குவாதி என்றெல்லாம் அவர் கொண்டாடப்பட்டவராஞலும் தன்னகத்தே வதியும் இலட்சக்கணக்கான கத்தோலிக்க மக்களின் இலட்சியவாழ்க்கையை அலட்சியம்செய்து அவர்கள் சொல்லொணுத்துயரும், தாங்கொணுத் துன்பமும் அனுபவிக்கும்படி செய்தவர் இப்பிரமுகரன்றே! மேலும் இவர் அவர்களின் உரிமைகளையும், உடைமைகளையும் தனது ஆதிக்கத்துக் குள்ளாக்கியவரன்றே!

தனதுநாட்டில் வதியும் மக்களுக்குச் சுதந்திரவாழ்வை அளிக்கமறுத்தவர் சுதந்திரமாய்வாழும் மக்களிடம்—அதுவும் அவர்களின் சுதந்திர விழாவைபவத்தின் விருந்தினராக வந்தமை பொருத்தமற்றதன்றே! ஆனல், இப்போது தமிழ்மக்கள் இருக்கும்நிலையில் அவர் யாழ்நகர் வந்திருந்தால், அடிமைகளைப்பார்க்க ஓர்அடிமைகளின் தலைவன் வந்ததுபோல் இருந்திருக்கும். மேலும் இது மிகையான ஓர் செயலாயும் அமைந்திருக்கும். அவரும் இங்கு நடப்பனவற்றைக் கண்டபின் தானும் செய்ததுசரிதானென எண்ணிக்கொண்டு போயிருப்பார்.

கத்தோலிக்கமக்களுமே நிறைந்துவாழும் எம்சமுதாயத்தின்மத்திக்குச் சீனப்பிரதமரை அழைத்து அவர்களின் வெறுப்பைச் சம்பாதிக்களண்ணியது, ஓர்அறத்தமிழன் நெறியாகுமா? இவர் இலங்கைக்குவந்ததே பெரியதோர் துரதிர்ஷ்டமாகும். இவர் வரவானது இனத்துவேஷம் தலைவிரித்தாடும்வேளையிலே மதத்துவேஷத்தையும் கிளப்புவதற்கு ஓர் ஏதுவாயிருக்குமன்றே! இவரை யாழ்நகர்வரும்படி அழைத்தமையானது வாசலில்கண்ட சர்ப்பத்தை வலுவில் வாரியெடுத்துப் பெட்டிக்குள்பூட்டிப் பூசிக்களண்ணியதுபோலாகும்.

"வழிநோக்கான் வாய்ப்பனசெய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்ருர்க்கு இனிது"

என்றபடி வாய்க்கப்பெற்றவர்தான் இச்சீனப்பிரதமர். இவர் யாழ்நகர் வராததும் நன்றே. வந்து கத்தோலிக்கரின் ஆட்சேபனைக்குள்ளாகாததும் நன்றே. ஆயினும் இவரை யாழ்நகர்வரும்படி எமது நகரபிதா அழைத்ததை எண்ணிப்பார்க்கும்பொழுது எமதுமனம் குமுருதிருப்பது எங்ஙனம்?

**ஞானசேகரன் அலோசியஸ்,**
சம்பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

---

● காலந்தோறும் கிரமமாக நடைபெற்றுவரும் வைத்திய பரிசோதனை அன்று நடத்தப்பட்டதிலிருந்து பரிசுத்தபாப்பரசர் "மிகவும் திருப்திகரமான" சுகமுடையவராய் இருக்கிருரெனக் கண்டறியப்பட்டிருக்கிறது. இற்றைக்கு இருவருடங்களின்முன் பரிசுத்தபிதா அபாயகரமானநோய் கண்டிருந்தபோது அவருக்குச் சிகிச்சைசெய்யுமாறு அழைக்கப்பெற்றிருந்த விசேஷவைத்தியநிபுணர்களில் ஒருவரும், முதன்மைபெற்ற வைத்தியருமான புரொபெசர் அன்ரோனியோ காஸ்பாறினி அவர்களே இம்முறை அவரைப் பரிசோதித்தார்.

---

## ஆசா. யோசேவாஸ் முனிவர்

ஒசேர்வாத்தோறே றேமானே என்ற வத்திக்கான் பத்திரிகையின் ஆசிரியர்மன்றத்தில் ஓர்அங்கத்தவரும், ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் முனிவர் சேர்ந்திருந்த அர்ச். பிலிப்புநேரியாரின் தியானசம்பிரதாயசபையைச்சேர்ந்த ஓர்குரவருமான மகாவண. கார்லோ காஸ்பறிசுவாமியவர்கள் யோசேவாஸ்முனிவரின் வாழ்க்கையுடனும், திருத்தொண்டுகளுடனும் சம்பந்தப்பட்டனவாய் இலங்கையிலும், இந்தியாவிலுமுள்ள பல்வேறு இடங்களையும் பார்வையிடுவதற்காக றேமாபுரியிலிருந்து வரலாயினர். இலங்கையிலும், இந்தியாவிலும் ஒருமாதகாலம் செலவிட்டபின் யோசேவாஸ்முனிவர் பிறந்து வளர்ந்தஇடமாகிய சான்கோல்என்னும் கிராமத்தைத் தற்போது போய்ச்சேர்ந்திருக்கின்ருர். அதனல் யோசேவாஸ்முனிவரின் பக்தர்களெல்லாம் அவர் சலுகையால் அடைந்துகொண்ட அனுக்கிரகங்கள், வரப்பிரசாதங்களையெல்லாம் — பொறளையிலே கொழும்புக் கத்தோலிக்க அச்சகத்திலுள்ள யோசேவாஸ் காரியாலயத்துக்குத் தெரிவித்து அவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டுவிக்கும் விஷயமாய்த் துணைச்செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.




## விதவையின் மகள்

மலாக்காநாட்டிலே உயிருள்ளவிசுவாசத்தை நிலைநாட்டச் சவேரியார் மகத்தான தொண்டாற்றிவந்தார். நாட்டுமக்களிற்பலரை ஒருங்குதிரட்டி அமலயேசுவின் நற்போதகங்களை அவர்களுக்குப் போர்த்தி அவர்களின் ஆன்மஇரட்சணியத்தை நிச்சயப்படுத்தினர். அஞ்ஞானிகளிற்பலர் அவரின் பரிசுத்தசீவியத்தையும், தற்பரித்தியாகக் கிரிகைகளையும்கண்டு ஆச்சரியமடைந்து அவரின் போதனைகளைக் கைக்கொள்ள முன்வந்தனர். அமங்கலகாலங்களில் நாட்டுமக்கள் அவரின் சலுகையை ஆவலுடன் நாடிவந்தனர். உன்னததேவன் உவந்தளித்த புதுமைவரத்தால் சவேரியார் அவர்களின் இன்னல்களை நிவிர்த்திசெய்து தத்தளித்த உள்ளங்களை விசுவாசத்தில் ஸ்திரப்படுத்திவந்தார்.

சவேரியாரின் போதனையைக்கேட்டு அருள்மறையைக் கைப்பற்றிய ஓர்விதவையின் ஏககுமாரத்தி வியாதியால் பீடிக்கப்பட்டாள். அவளின் வியாதியைக்குணமாக்க அநேகவைத்தியர்கள் முனைந்தார்கள் ஆனல், அவர்களின் பிரயத்தனங்கள் வியர்த்தமாயின. மகளின் ஆபத்தானநிலைபரத்தால் அல்லலுற்றதாய் சவேரியாரின் உதவியை நாடி வந்தாள். ஆனல், அவர் அந்நாட்களில் மலாக்காவிலிருந்து அநேக மைல்களுக்கப்பாலுள்ள ஓர்தீவுக்குச் சென்றிருந்தார். சில நாட்களின் பின் விதவையின்குமாரத்தி மரித்தாள். கவலைக்கடலில் மூழ்கியதாயும், பந்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் அவளுடலைப் பூமதானம்செய்தார்கள்.

மூன்று நாட்களின்பின்னர் சவேரியார் மறுபடியும் மலாக்காநாட்டுக்கு வந்தார். சவேரியாரின் வருகையைக் கேள்வியுற்ற தாய் ஓடோடியுஞ்சென்று அவர்பாதத்தில் வீழ்ந்து தனக்கு நிகழ்ந்த பெருங்கெடுதியை எடுத்துரைத்துப் புலம்பியழுதாள். லாசர் மரித்தடக்கம் செய்யப்பட்டபின் அவர்கள் இல்லத்தை நாடிவந்த யேசுநாதரின் பாதத்தில் வீழ்ந்தழுத மாத்தாள்உரைத்த அதேவார்த்தைகளை அவ்விதவையும் எடுத்துரைத்துப் புலம்பினள். சுவாமி, தாங்கள் இவ்விடத்திலிருந்தால் என்மகள் இறந்திருக்கமாட்டாளென்று அழுதாள். அவளின் தளம்பாத விசுவாசத்தைக் கண்டு ஆச்சரியமடை[illegible]த சவேரியார் அவளைப்பார்த்து உன்மகள் சீவனோடு இருக்கின்றாள், கலவைப்படாதே என்றார். விதவையோ அவளை அடக்கம் செய்து மூன்றுநாட்களாகிவிட்டனவென்று கண்ணீர்மல்கும் கண்களுடன் பதிலளித்தாள். சவேரியார் அந்தக்கல்லறைக்குத் தம்மை அழைத்துச்செல்லும்படி கேட்கவே, அக்களிப்படைந்த விதவை துரிதமாக அவரை அழைத்துச்சென்றாள். பெருந்திரளான மக்கள் சவேரியாரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். கல்லறையை அடைந்ததும் சவேரியார் தரையில் முழந்தாளிட்டு வானத்தைநோக்கி அதிகநேரம் செபஞ்செய்தார். அஞ்ஞானிகளின் மத்தியில் தாம்புரியும் இப்புதுமை அவர்களில் அநேகர் அருள்மறையைக் கைக்கொள்ளச்செய்ய வல்லதாகையால் தமது மன்றாட்டுக்குச் செவிசாய்க்கவேண்டுமென்று உருக்கமாகப் பிரார்த்தித்தார். செபம்முடிந்தவுடன் அங்கு சூழமியிருந்தோரைப் பார்த்துக் கல்லறையைத் திறக்கும்படிபணித்தார். என்ன அதிசயம்! சௌந்தரவதியான விதவையின்குமாரத்தி புன்னகைதவழும் வதனத்துடன் கல்லறையிலிருந்து வெளியேறினள். ஆங்குபிரசன்னமாயிருந்தவர்கள் யாவரும் ஆச்சரியவசத்தராகி ஆனந்தக்கடலில் மூழ்கினர்கள்.

— நல்[illegible]ர் மீசாம்

---

● தென்துருவத்திற்கண்ட தீவொன்றிலே ருஷியகப்பலொன்று உப்புப் பாலைவனமொன்றைக் கண்டறிந்திருப்பதாகச் சோவியத் செய்திஸ்தாபனம் தெரிவித்திருக்கின்றது. அந்தத்தீவிலே மலையைப்போன்று உப்புக் குவிந்து கிடக்கிறதென்றும், அங்கு சீவராசிகளோ, பயிர்பச்சைகளோ மருந்துக்குத்தானும் கிடையாதென்றும் சொல்லப்படுகிறது. பரிசோதனைசெய்வதற்காக இந்தஉப்பை அந்தக் கப்பலிற்சென்ற ருஷியர்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்களாம்.

● ருஷியதொழிலாளர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கும்; மேற்குநாடுகளின் பொருளாதாரத்திற்குச் சமமாகச் சோவியற்பொருள் உற்பத்தியைப் பெருக்குதற்குமாக ருஷியாவின் பொருளாதாரநிபுணரும், முதலாவது உதவிப்பிரதமருமான திரு. பர்லிகின்என்பார் பிரதமசோவியற்கூட்டத்தில் ஓர் புதியதிட்டத்தைச் சென்ற 6-ந்திகதியன்று சமர்ப்பித்திருக்கின்றாராம். அவ்வாறாயின் ருஷியதொழிலாளர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கான திட்டம் இதுவரை வகுக்கப்படவில்லைபோலும்.



# பல தேசங்களில்

## மேல்நாடுகளின் பலம்

“எந்தச்சத்துருவையும் ஒழித்துக்கட்டக்கூடிய ஆகாயவிமானமும், ஆயுதபலமும் மேற்கத்தியநேசநாடுகளிடம் போதியளவு இருக்கின்றன; தங்கள் நாசகாரசக்தியையிட்டு நமக்கு எவ்வித சந்தேகமுமில்லை; சோவியற்விமானப் படையின் பருமனைப்பற்றி நமக்கு அக்கறையில்லை; சத்துருவை ஒழித்துவிடக்கூடியஅளவு வி[illegible]மானங்களும், தளங்களும், ஆயுதங்[illegible]ளும் நம்மிடம் இருக்கின்றன; சத்[illegible]ருவினால் இவைகளை அழிக்கமுடி[illegible]யாது” என்று ஐரோப்பாவிலே நேசநாடுகளின் பிரதமசேனாபதியான ஜெனறல் லோறிஸ் நோஸ்ராட் சமீபத்திலே தெரிவித்திருக்கின்றார்.

## அராபியநாடுகளும் கம்யூனிஸமும்

தேசியமென்ற போர்வையிலே அராபியநாடுகளில் கம்யூனிஸம் புகுந்துவிடக்கூடிய ஆபத்தைப்பற்றி எச்சரித்து ஜோர்தான்நாட்டின் ஹுசேன் மன்னர் தமது பிரதமமந்திரியான ஜனாப் சுலைமான் நபுல்ஸிக்கு ஓர்செய்தி அனுப்பிவைத்திருக்கின்றார். கம்யூனிஸ்தபிரசாரத்தை ஒழிப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், கம்யூனிஸத்தை எதிர்த்து நாட்டின்சட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் ஹுசேன் மன்னர் பிரதமமந்திரியையும், மந்திரிசபையையும் வற்புறுத்திக் கேட்டிருக்கின்றார். இப்பொழுது உலகின் பெரும் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்குக் கம்யூனிஸ்தர்களின் சூழ்ச்சியேகாரணம். இதை ஜோர்தான் மன்னர் இப்பொழுதாவது கண்டுபிடித்ததும், தமதுபிரதமருக்கு மேற்சொல்லிய எச்சரிக்கையை விடுத்ததும் மனிதஉரிமையை மதிப்பவர்களுக்கும், உண்மைஜனநாயகத்தை விரும்புபவர்களுக்கும் மிகுந்தஆறுதல் அளிக்கத்தக்க செய்தியாகும்.

## பிரமாண்டமான எண்ணெய்க் கப்பல்

ஐக்கிய அமெரிக்கதேச குயின்ஸிநகரிலுள்ள பெத்லகேம் உருக்குக்கம்பெனியின் கப்பல்கட்டும் நிலையத்திலே உலகின்மகாப்பெ[illegible]ரியதாய் ஒருலட்சம் தொன் நிறைகொண்ட எண்ணெய்க்கப்பலொன்று கட்டப்படவிருக்கிறது. இது உல்லாசப்பிரயாண கப்பல்களைப் போலும், அமெரிக்ககடற்படையைச்சேர்ந்த பொறெஸ்ரல்என்ற விமானந்தாங்கிக் கப்பலைப்போலும் அத்துணை நீளமுள்ளதாயிராது. ஆயினும் அதுகொள்ளக்கூடிய 1,00,000 தொன் எண்ணெயும் ஏற்றப்படுமிடத்து 1,30,000 தொன் நிறைகொண்டதாய் இக்கப்பல் உலகின் மகாப்பெரிய கப்பலாய்விளங்கும். இதிலேகசோலின் நிறையஏற்றப்படுமிடத்து அதுகொண்டு 21லட்சத்து 50ஆயிரம் மோட்டர் வண்டிகளின் எண்ணெய்த்தாங்கிகளை நிரப்பக்கூடியதாயிருக்கும். அதேயளவாக ஏற்றக்கூடிய பெற்றோல் கொண்டு நிரப்பப்படும் றெயில்பாதைத்தாங்கிக்கார் றெயின்வண்டி ஒன்று 28 மைல் நீளமுள்ளதாயிருக்கும். இந்தக் கப்பல் 940அடி நீளமும் 132அடி அகலமும், அடித்தளத்திலிருந்து மேற்தளம் வரையிலே ஏழுமாடிக் கட்டடமொன்றுக்குச் சமமானஉயரமும் உள்ளதாயிருக்கும்.

## இந்தியாவும் பிறமதத்துவேஷமும்

இந்தியபிரதமர் பண்டிதநேரு அவர்கள் ஔரங்கஷிப்நகரில் நடைபெற்ற ஓர்பொதுக்கூட்டத்தில் பேசியபோது: “அரசாங்கம் சமயச்சார்பற்றது; புத்திசாலியான எந்த ஒரு இந்தியனும் எந்தச்சமயத்தின்பாலும் துவேஷம் பாராட்டமாட்டான்; ஒருவன் தனது சமயத்தை மற்றவர்கள் மதிக்கவேண்டுமென்றுஎதிர்பார்த்தால் அவன் ஏனைய சமயங்களை மதித்துநடக்க வேண்டுமென்றுகூறும் அசோகர் ஸ்துபியை இந்தவேளை நினைவூட்டவிரும்புகிறேன்; ஏனையசமயங்களை நாம் துவேஷிக்க ஆரம்பிக்கும்பொழுது நமது வீழ்ச்சியும் ஆரம்பமாகும்” எனக் கூறியிருக்கின்றார்.

* * *

● சீனக்கம்யூனிஸ்தர்கள் அங்குஷான்ஸிமாகாணத்திலுள்ள யுட்சிநகர பிரான்சீஸ்கன்மிஷனின் சிரேஷ்டரான வண. ஹியூமிலிஸ் யாங்சுவாமியாரையும், அதேமாகாணத்திலேயே ராயுவான்பியு மிஷனைச்சேர்ந்த வண. ஜோண் பப்ரிஸ்ற் சுவாமியாரையும் கைதுசெய்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

● சென்ற மகாயுத்தத்திலே மனிலாக்குடாக்கடலிலும், பிலி[illegible]ப்பைன்ஸ் தீவுகளைச்சேர்ந்த மற்றுந்துறைமுகங்களிலும் மூழ்கடிக்கப்பட்ட 311 கப்பல்களையும் மிதத்தியெடுக்க ஜப்பான் தற்போது முன்வந்திருக்கிறது. இதற்கான புதியஉடன்படிக்கையொன்று விரைவிலே செய்துகொள்ளப்பட விருக்கிறது.

● ஐக்கிய அமெரிக்கதேயத்துடன் பொருளாதார உறவுகளை அதிகமாக்கிக்கொள்ளும் வழிவகைகள்பற்றி ஆராய்வதற்காகச் சமீபத்திலே அங்கு வர்த்தக தூதுக் கோஷ்டிஒன்றைப் போலாந்து அனுப்பவிருக்கிறது. அமெரிக்காவில் தேவைக்குக்கண்டு எஞ்சியிருக்கும் கமவிளைபொருட்களைக் கடனுகவாங்குவதுபற்றி இந்தக்கோஷ்டி பிரதானமாய்ப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறது.

● இந்தியஅரசாங்கம் தனதுவிமானப்படைக்கென்று ஆங்கில எலெக்றிக்கம்பெனியிடம் ஆடர்செய்திருந்த 68 கன்பெறு வெடிகுண்டு விமானங்களும் அடுத்தகோடைகால ஆரம்பத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட விருக்கின்றன. பிரித்தானியில் பயிற்சிபெற்றுவரும் இந்திய விமானப்படையைச் சேர்ந்த விமானிகளே இந்தவிமானங்களில் சிலவற்றை இந்தியாவுக்குச் செலுத்திவருவார்கள்.

● உலகிலேயே மிகப்பெரிய மாணிக்கக்கல் பாகிஸ்தானிலே அப்டாபாத்தைச்சேர்ந்த பஷிருத்தீனகுரேஷி என்பவரிடம் இருக்கின்றதாம். பட்டைதீரப்படாத இந்தக்கல் 300 கறற் நிறையுள்ளது. இதனைப் பரிசோதித்த லண்

## மூன்றுமொழிகளிலும் இடாப்புகள்

மன்னார்ப்பிரிவிலே இவ்வாண்டின் நடுப்பகுதியில் எட்டுக் கிராமச்சங்கங்களின்தேர்தல் நடைபெறவிருக்கிறது. இதுசம்பந்தமான வாக்காளர்இடாப்புகள் திருத்தியமைக்கப்பட்டுச் சென்ற 8-ந் திகதி முதல் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டிருக்கின்றன. திருத்தியமைக்கப்பட்ட இந்த இடாப்புகள் ஆங்கிலம், தமிழ், சிங்களம் எனும் மூன்று பாஷைகளிலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

## தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கம்

லண்டன்சர்வகலாசாலையின் உயர்தரபரீட்சைகளில் கலந்துகொள்ளக்கூடியவகையிலே மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க “நாவலர் உயர்தரகலாசாலை” ஒன்றை ஸ்தாபிப்பதெனத் தமிழ்ச் சர்வகலாசாலைஇயக்கம் தனது முதல்நடவடிக்கையாகத் தீர்மானித்திருக்கிறது. இந்தஉயர்தர கலாசாலை அடுத்தவைகாசிமாதத்திலே ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது. இதன் அதிபாரகச் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பொறுப்பேற்கக் கூடுமெனத் தெரியவருகிறது. கொழும்பிலே சென்றசனிக்கிழமைமாலை தமிழ்ச் சர்வகலாசாலை இயக்கத்தின் பொதுக்கூட்டமொன்று நடைபெற்று, அதிலே முன்சொன்னவாறு முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. சரித்திர, கணித, சட்ட நிபுணர்கள்பலர் சம்பளமின்றியேஇதில் சேவைசெய்ய முன்வந்திருக்கின்றனர். இந்தஉயர்தர கலாசாலையில் சகல சமூகங்களையுஞ்சேர்ந்த மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இரத்மலானையிலுள்ள கொழும்பு, இந்துக்கல்லூரிக் கட்டடத்திலே இந்தக்கலாசாலை இடம்பெறவிருக்கிறது. அதிலே பட்டப் பரீட்சைகளுக்குப் போதனையளிப்பதற்கேற்ற விரிவுரை அறைகளும், விஞ்ஞான அறைகளும் சிறப்பாக அமைந்துள்ளன. பிரித்தானிய, அமெரிக்க சர்வகலாசாலைகளில் ஆராய்ச்சிப்பட்டங்கள்பெற்ற போராசிரியர்கள் சம்பளமின்றியே இதில்கல்வியளித்துவருவார்கள்.

---

✻ கஸ்தூரி எப்படிக் கிடைக்கிறது?

முக்கிய வாசனைப்பொருளும், விலையேறப்பெற்றதுமான கஸ்தூரி மானின் அடிவயிற்றிலிருந்து கிடைக்கிறது. நன்றாகவளர்ந்தஒருமானிலே ஒன்றுமுதல் இரண்டுஅவுண்ஸ்வரையில் கஸ்தூரி இருக்கும். பச்சையாக இருக்கும்போது கஸ்தூரி மணக்காது. உலர்ந்த பின்னரே அதில் மணமுண்டாகும்.

---

டன் நகைவியாபாரிகள் இதற்கு 20லட்சம் பவுண் கொடுக்கத் தயாராயிருக்கிறார்களாம். இதைவிட அவரிடம் லட்சக்கணக்கான ரூபாமதிப்புள்ள மற்றிரண்டு மாணிக்கக்கற்களும் இருக்கின்றனவாம்.

● சென்னை இராச்சியத்தின் புதிய தேசாதிபதியான திரு. ஏ. ஜே. ஜோண் அவர்களின் ஞானவிசாரணைக் குருவாகக் கோளநாட்டைச்சேர்ந்த கொத்தமங்கலம் எனுமிடத்திலுள்ள தர்மகிரிஸ்தாபனங்களின் தலைவராயிருந்துவந்த வண. ஜோர்ஜ் மெனச்சேரி சுவாமியார் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் தமது புதிய பதவியைச் சென்ற தைமாதம் 15-ந் திகதி பொறுப் பேற்றுச் சாயிதாப்பேட்டையிலுள்ள விற்றிள்மவுண்றில் சஞ்சரித்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குகைக்கன்னி

— ஆரோக்கியநேசன் —

சிங்கத்தின்குகையில் அகப்பட்ட சிறுநரிபோல்—புலியின்வாயில் அகப்பட்ட புள்ளிமான்போல்—வல்லூறினுல்துரத்தப்பட்ட மாடப்புருவைப்போல் அவள் அந்தமுரடனின் கையில் சிக்கிக்கொண்டாள். ஆனுல், சிறுநரிபோல் பதுங்கவில்லை—புள்ளிமான்போல் மருளவில்லை — மாடப்புருவைப்போல் பதைபதைக்கவில்லை.

வைரமுடிஅணிந்து, பொன்னில் புரண்டுவாழும் அரசபோகத்தை உதறித்தள்ளித் தனது கற்பிற்காக நங்கூரத்தாலிஏந்திக் கடலில் தாழ்ந்தபோது புனிதை பிலோமினுளுக்கு ஏற்பட்ட அதேநெஞ்சுரம் — ஆண்டவரை அல்லற்படுத்தி அடித்திழுத்துச்சென்ற அராசகக் கும்பலின்நடுவே புகுந்து, அவரது கறைபடிந்த முகத்தைத்துடைத்துக் கனிஊட்டிய கன்னி வெரோணிக்காளின் அதேநெஞ்சுரம்—அந்தச் சிறுமியின் — பேர்னதெத்தின் உள்ளத்திலும் உரமூட்டியது.

கன்னி பேர்னதெத் தான்கண்ட காட்சியைக் கூறியபோது வெகுண்டெழுந்தது அரசாங்கம் — வேதனை கொண்டார்கள் வீட்டவர் — கேலி பாடியது நாஸ்திகக்கும்பல் — களிபாடியது ஆஸ்திக உள்ளங்கள். மதத்தலைவர்கள் உட்பட மக்களனைவரதுஉள்ளங்களும் ஈர்க்கப்பட்டன அந்தக் குகையைநோக்கி!

படையெனப் புறப்பட்டனர் மக்கள் அரசாங்கத்தின் தடையைமீறி. அன்னைமேரியின் அழகுருவைக் காணும் ஆவல்உந்தப் புறப்பட்டோர்—அவளின்ஆசீரைப் பெறலாமெனப் பக்திததும்பப் புறப்பட்டோர் — காட்சியைக் கனவென்று நிரூபிக்கக் கங்கணங்கட்டிப் புறப்பட்டோர் — காட்சி உண்மையென்று நிரூபிக்க உறுதிபூண்டு புறப்பட்டோர் — நாஸ்திகர் — ஆஸ்திகர் — புனிதர்கள் — பக்தர்கள் — ஆண்கள் —பெண்கள்—இளைஞர் — முதியோர் — குழந்தைகள் இப்படியாக அந்த மலையைநோக்கிப் புறப்பட்டது பெரியசனத்திரள் தொடர்ந்துவரும் கடலலைபோல்.

அந்தக்காட்சி — பரலோகஅன்னை லூர்துகுகையில் கள்ளங்கபடமற்ற ஏழைச்சிறுமி பேர்னதெத்திற்குத் தோன்றித் தமதுஅமலஉற்பவத்தை —புனிதபிறப்பை – வெளிப்படுத்திய ஊர்சிதப்படுத்திய அந்தக் காட்சி உலகமக்களனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

தான்கண்ட அன்னையின் தோற்றத்தை — அந்தரங்கமானமலையிலே அமைந்த குகையில் அன்னை தோன்றிய காட்சியை—தான் கண்டுஅனுபவித்த அந்தப்பேரின்பத்தை யாவர்க்கும்அறிவித்தாள்சிறுமிபேர்னதெத். அந்தஉண்மையை ஊர்சிதப்படுத்தியது அந்தஅன்னையின் ஆஞ்ஞையால் அவள்தோண்டிய சிறு ஊற்று — ஊற்றிலிருந்துபுறப்பட்ட தண்ணீர் —புனிதநீர் புரிந்த புதுமைகள்!

பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப்பின் திருச்சபையும் ஊர்சிதப்படுத்திற்று, அந்தப் புனிதகாட்சியையும்—அவளது அலமஉற்பவத்தையும்.

இன்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்தலூர்துகுகையை அண்டிப்போய் அந்தக் குகைக்கன்னியைத் தோத்திரிக்கிருர்கள். அவளது அமல உற்பவத்தை இடைவிடாது நாடோறும், நிமிடந்தோறும் பாடுகிருர்கள். கேட்பதை இல்லையெனுது அள்ளிஅள்ளி வழங்கும் அவளது வள்ளல்உள்ளம் இன்றும் ஏராளமானவரங்களை அள்ளிப்பொழிகிறது. இதற்கு அங்குநன்றி பாடும் கவிஉள்ளங்களே சாட்சி. "ஆவேமரியா" எனும் அமரகீதம் இடைவிடாது பாடப்பெற்று விண்ணெட்டும்காட்சியே — அந்தத்தெய்வீக லூர்துநகரில் — மலைத்தேரில் அமர்ந்து மக்கள் உள்ளங்களில் பவனிவரும் அத்தாயின்பெருமையே அவளது அமல உற்பவத்திற்குச் சாட்சி! பெருமையும்கூட!

பூலோக மோட்சம்போல் அணையாத விளக்குகள் — முடிவுபெருத செபங்கள் — தொடர்ந்தகீதங்கள் அம்மலைநகரிலே நடைபெறுகின்றன. எல்லாவற்றிற்கும்உயர்வாக நிமிடம் தவருமல் ஆண்டவரும்(தொடர்ந்து நடைபெறும் பலிபூசையின்மூலம்) அன்னைமரியும் அந்தமலையைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டுள்ளனர். என்னே இதயஞ்சிலிர்க்கும் இன்பக்காட்சி!

அன்று பேர்னதெத்திற்குத் தோன்றிய அதேகாட்சி — மலையின் குகையிலே வெண்ணுடையணிந்து — இடுப்பில் நீலக்கச்சையுடன் — கையில் செபமாலை ஏந்தி — விண்ணோக்கிய அன்புவிழிகளுடன் — தெய்வீக ஒளிவடிவாகத் திகழும் அன்னையின்தோற்றம் — அன்று "நாமே அமல உற்பவம்" என்று அவள்கூ[illegible]ச்சென்ற சொற்களுக்கு அர்த்தம் புகட்டுகிறது.

தனது மாசணுகாப் புனித பிறப்பைஉணர்த்த வெண்கதிர்சூழ் சோதிமேனியுடனும்— தன்பரிசுத்ததனத்தை உணர்த்த வெண்ணுடையுடனும்—கற்பின் மேன்மையையும், அவசியத்தையும்உணர்த்த நீலநிறக் கச்சையை இடுப்பில்அணிந்தும் — அடக்கம் அவசியமென்றுவற்புறுத்த நெடுமுக்காடணிந்தும் — மனிதன் நாடவேண்டியகதி வானவீடென்று எடுத்துரைக்க விண்ணோக்கியும் — இவைஅத்தனையும்பெற ஒருவழி செபமாலைஎன்றுஅறிவிக்க அதனைக் கையில் ஏந்தினவளாயும்—மக்களின் இன்பதுன்பவாழ்வில் தான் துணையென்றுநிரூபிக்கக் கல்லும்,முள்ளும், மலரும்நிறைந்த மலைக்குகையிலும்— ஆண்டவரின்அரசபோகம் தாழ்ச்சியும், தரித்திரமுமென்று எடுத்தோத ஏழைச்சிறுமி பேர்னதெத்திற்கும்— தேவசிநேகமும், பிறர்சிநேகமும் முக்தியின்படிகளெனநிரூபிக்கத் தன் இருபாதங்களிலும் இருமலர்களைத் தாங்கியும் அன்னை காட்சிதந்தாள். என்னே அவளது அன்பு! தயை! பெருமை!

அன்னை அவள் அரவணைப்பிலே இன்பம்கொண்டு மழலைமொழியால் அவளை மகிழ்விக்கும் குழந்தைஉள்ளத்தோர்—கேட்டவரங்களை இல்லையெனுது அள்ளிஅள்ளி வாரிஇறைக்கும் அவளது வள்ளல்உள்ளத்தைப் பாடிப்போற்றும் கவிஉள்ளங்கள் — விண்ணிற்கும், மண்ணிற்கும் இராணி இவளெனக்கண்டு அவளது புகழ்பாடிநிற்கும் பிரசை உள்ளங்கள்—கடந்துபோன பாவவாழ்வின் இருளைப்போக்க நல்லஒளி இவளெனக்கண்டு தேடிவந்த மெலிந்தஉள்ளங்கள் — பிணியின்பிடியிலே சிக்குண்டு கடைசிக்கதி இவளென நாடிவந்த நோயுள்ளங்கள்—இப்படியாக ஏராளமானமக்கள் — அவள் தந்த காட்சிக்கும், அவளது அமல உற்பவத்தின் மாட்சிக்கும் சாட்சிகூறுகின்றனர்.

அன்னை அமலஉற்பவி லூர்துநகரில் மட்டுமின்றி உலகமெலாம் எந்நேரத்திலும், யாவர்க்கும் — இல்லையெனுது தன்னை மறந்தோர்க்கும், மறுத்தோர்க்கும்— நம்பினேர்க்கும், நம்பாதோர்க்கும் — மொத்தத்தில் எல்லோர்க்கும் அநேக அற்புதங்களைச் செய்துவருகிருள் நல்லதாயுள்ளத்தோடு. அந்தஅன்புத்தாயைப் போற்றி, அவளதுஅன்பைப் பெற வேண்டியது மக்களாகிய நமது கடமை.

அவளை என்றும் நமதுஉள்ளத்தே நினைவுபடுத்தவேண்டு[illegible]. வரங்கள் பெற — பெற்றவரங்களுக்கு நன்றிகூற—அவளது அமலஉற்பவத்தைப் பெருமைப்படுத்த ஊர்கள்தோறும் கெபிகள்கட்டி, அங்கே அமலஅன்னையை அமர்த்தவேண்டும். அவற்றில் "நாமே அமலஉற்பவம்" என்று அன்னை கூறிய முத்துச்சொற்கள் சொலிக்கவேண்டும். லூர்துகெபிகள் உலகெங்கும்பரவி லூர்துநகரின் எதிரொலியாகத் திகழவேண்டும். மக்களின் நல்லஉள்ளங்களை— நன்றிஉள்ளங்களை — அன்புஉள்ளங்களைக் கண்ட தாயுள்ளத்தில் சுரக்கும் அன்புச்சுனையானது லூர்துநகரில் சுரந்தோடும் நீர்ச்சுனையைவிடப் பன்மடங்கு வல்லமை பெற்றதாய் இருக்காதோ?

வாழ்க லூர்துஅன்னை!
வாழ்க அவளது அமல உற்பவம்!

— சத்தியபோதினி

# அன்னதான ஸ்தாபனம்

உலகெங்கும் லட்சக் கணக்கானேருக்கு அன்னதானத தொண்டாற்றி வருகின்ற தனிப்பட்ட அமெரிக்க தருமஸ்தாபனம் ஒன்றிருக்கிறது. அதன் தலைமையிடம லொஸ்ஏஞ்சலிஸ் நகர். உலகிலுள்ள 102நாடுகளிலே நாலரைக்கோடிக்கு மேற்பட்ட உணவுப் பொட்டணங்களை வழங்கியிருக்கிறது இந்தஸ்தாபனம்.

இந்த அமெரிக்க அன்னதானஸ்தாபனம் நிகழாண்டில் தனது பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. அமெரிக்கமக்களின் உதாரகுணத்தினுல் நடைபெற்றுவரும் உலகளாவிய இந்தஇயக்கத்தின் தலைமைச்செயலாளர் செல்வி லோற[illegible]ஸ் ரேஸ். 1955-ம் ஆண்டு இலங்[illegible]—இந்தியாஉட்படப் 19நாடுகளில் இவர் சுற்றுப்பிரயாணஞ் செய்தார் இலங்கையிலே ஒன்பது நாட்கள் தங்கியிருந்த, அரசாங்க தலைவர்களுடனும், சமூகசேவை ஸ்தாபனங்களின் தலைவர்களுடனும் கலந்து பேசினர்.

செல்விரேஸ் இந்நாட்டில் இயக்கத்தின்பணியை விரித்துரைத்தார். இந்த ஸ்தாபனம் இனமாகவழங்குவதற்கும், ஆராய்ச்சி செய்து பார்ப்பதற்குமாக 14,000 ருத்தல் சத்துமிக்க உணவுப் பொட்டணங்களை இலங்கைக்குக் கொடுத்துள்ளது. ஒவ்வொருநாடும் தானுக ஆராய்ச்சிசெய்து போஷணை மிக்கஉணவைத் தயாரிக்கும்துறையில் அமெரிக்க அன்னதானஸ்தாபனத்தின் ஒத்துழைப்பு விசேடமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த அன்னதானஸ்தாபனம் தோன்றியவரலாறு சுவையானது. கிளிபர்ட் கிளின்டன்என்பவர் லொஸ்ஏஞ்சலிஸ் நகரிலே பல சிற்றுண்டிச்சாலைகளின் சொந்தக்காரராவர். சின்ன வயதில் இவர் சீனத்திலே பஞ்சம்மிகுந்த ஒரு பகுதியில் வளர்ந்தவர். எனவே, பஞ்சத்தின்கொடுமை[illegible]யை நேரில் அறிந்தவர். அப்போது இவருக்கு ஓர்உறுதி பிறந்தது. மக்களின்பசியைத் தீர்ப்பதற்கு மார்க்கங்காண வேண்டுமென்று தமக்குஏற்பட்டஉறுதியைத் தமது பெற்றேராகிய அமெரிக்கமிஷனரிகளிடம் தெரிவித்தார்.

பல்லாண்டுகளுக்குப் பிறகு கிளின்டன் லொஸ்ஏஞ்சலிஸ்நகரில் பல சிற்றுண்டிச்சாலைகளின் சொந்தக்காரரானர். 1929-ம்ஆண்டு பொருளாதாரமந்தம் காணத்தொடங்கியபோது, ஒரு சதத்துக்கு (இலங்கைச்சதம் ஏறக்குறைய 5) சத்தானஉணவு வழங்கினர். அமெரிக்கஅரசாங்கம் கஷ்டநிவாரண வேலையை மேற்கொண்டதால் கிளின்டன் தமதுகவனத்தை உணவுஆராய்ச்சியில் செலுத்தினர்.

விலைஅதிகமாக இராததும், சத்துப்பண்டங்களான புரதம், விற்றமின் ஆகியவற்றைத் தேவையான அளவு அளிக்கக்கூடியதுமான உணவுதயாரிக்கக் கிளின்டன்முற்பட்டார். வெற்றியும் பெற்ருர். இவரதுமுயற்சியினுல் பக்குவப்படுத்தப்பட்ட (பொடியாயிருக்கும்) உணவை அன்றுடஆகாரத்துடன் சாப்பிட்டால் போதும். இந்தச் சத்துணவின்விலை 3சதம். (இலங்கைச்சதம் 15)

இந்தியாவில் இந்தஇயக்கத்தின்—அதாவதுமலிவாக நல்லஉணவு தயாரிக்கும்இயக்கத்[illegible] சிறப்பைப் பிரதமர் நேரு உணர்[illegible]ார். லொஸஏஞ்சலிஸ் அன்னதான இயக்கத்தின் சத்துணவைச் சுவைத்துப்பார்த்தார் நேருஜி. அதன்பயனுகப் பங்களூரில் நிலக்கடலையை (புரதம்மிக்கது) மூலப்பொருளாகக்கொண்டு சாப்பாட்டுடன் சேர்த்துக் கொள்ளக்கூடிய சத்துணவைத் தயாரிக்குமாறு ஏற்பாடுசெய்தார்.

அமெரிக்க அன்னதானஸ்தாபனத்தின் தலைமைச்செயலாளர் செல்வி ரேஸ் கூறுவதுபோல, வறியவர்க்கு இனமாகச் சத்துணவுவழங்குவதுடன், ஒவ்வொருநாட்டுக்கும் இவ்வகையில் தனிஆராய்ச்சியறிவையும் இந்தஸ்தாபனம்வழங்குகிறது. அன்னதானம் மாத்திரமன்று; அறிவுத்தானமும் செய்கிறது இந்தமேலான ஸ்தாபனம்.

## நேர்த்தியின் பூர்த்தி

சதாசகாயமாதாவின் உதவியாலும், அர்ச். செபஸ்தியாரின் மன்ருட்டாலும் எனக்கும், என்மனைவிக்கும் வந்த வியாதிகள் குணமடைந்தன. இன்னும் எங்களது குடும்பத்திலுள்ள கஷ்டதின்பங்களை நீக்கி எங்களைக் காப்பாற்றியருளும்படி இரந்து நிற்கின்ருேம். நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

மன்னர் ஆரோக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உன்மகன் பிழைத்திருக்கிறுன்"

ஒரு சிற்றரசனின்மகன் கப்பர்ளுவும் ஊரிலே வியாதியாயிருந்தான். யேசுநாதர் யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வருகிறுரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டவுடனே அவரிடத்திற்போய், அவர்வந்து தன் குமாரனைக் குணமாக்கவேண்டுமென்று மன்ருடினுன். ஏனெனில், அவன் சாகக்கிடந்தான். அப்பொழுது யேசுநாதர் அவனைநோக்கி: நீங்கள் அற்புதங்களையும், ஆச்சரியங்களையும் கண்டாலொழிய விசுவசிக்க மாட்டீர்கள் என்றுசொல்ல, அந்தச் சிற்றரசன் அவரைநோக்கி: சுவாமி, என்மகன்சாகிறதற்கு முன்னேவரவேண்டுமென்ருன். யேசுநாதர் அவனை நோக்கி: நீபோகலாம், உன் மகன்பிழைத்திருக்கிருன் என்ருர். அந்தமனுஷன் யேசுநாதர் தனக்குச் சொன்ன வார்த்தையை நம்பிப்போனுன். அவன் போகையில், அவனுடைய ஊழியர் அவனுக்கு எதிர்கொண்டுவந்து: உம்முடையகுமாரன் பிழைத்திருக்கிருனென்று அறிவித்தார்கள். அப்பொழுது அவன்: எந்நேரத்தில் அவனுக்கு வியாதிகுணமானதென்று அவர்களிடத்தில் விசாரிக்க, அவர்கள் நேற்றுஏழுமணிக்குக் காய்ச்சல் அவனைவிட்டு நீங்கினது என்ருர்கள். உன்மகன் பிழைத்திருக்கிருனென்று யேசுநாதர் தனக்குச் சொன்னநேரம் அதுதான் என்று தகப்பன்அறிந்து அவனும், அவன் வீட்டாரனைவரும் விசுவசித்தார்கள்.

சருவேசுரன் எல்லோரையும் இவ்வுலகத்தில் ஒரேவித நன்மைகளால் ஆசீர்வதிப்பதில்லை. சிலரைப் பணத்தால்ஆசீர்வதிக்கிருர். சிலரைச்சுக போகங்களினுல் ஆசீர்வதிக்கிருர். இன்னும்சிலரை ஞானத்தால் ஆசீர்வதிக்கிருர். இப்படியே வெவ்வேறு நன்மைகளால் சர்வேசுரன் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்கிருர். இவைகளைவிடச் சனங்கள் விரும்பும் புத்திரசந்தானத்தாற் சிலரைஆசீர்வதிக்கிருர். புத்திரசந்தானம் பெரிய பாக்கியமென இவ்வுலகில் கருதப்படுகிறது. பழையஏற்பா[டு]டில் புத்திரசந்தானமில்லாத குடும்பம் சபிக்கப்பட்டகுடும்பமெனக் கருதப்பட்டுவந்தது. இக்காலத்திலும் புத்திரசந்தானமில்லாத தம்பதிகள் எவ்வளவு கவலையடைகிருர்கள். ஏக்கம்கொள்ளுகிருர்கள். தபம்செய்கிருர்கள். ஆகவே, புத்திரபாக்கியம் எவ்வளவோ பெரியபாக்கியம்

பிள்ளைகளைவளர்ப்பது பெற்ருேர்களின்மேல்சுமந்த பெரிய கடமை. சிலபெற்ருேர் பிள்ளைகளின் சரீரத்தைமட்டும் கவனிப்பார்கள். உடுப்பு, துணிமணிகள் முதலியவற்றை ஒரு குறையுமின்றி வாங்கித்தருவார்கள். வியாதியாயிருந்தால் இராப்பகலாகத் கண்விழித்து, பட்டினிகிடந்து பிள்ளைகளின் அருகிலிருந்து வேண்டியஉதவியைச் செய்வார்கள். பிள்ளை சிசுவாயிருக்கும்பொழுது, சிசுவுக்குப் பதிலாகத் தாய்பத்தியமாயிருந்து, தனது உயிரைத்திரணமாக மதித்துப் பிள்ளையைக்காப்பாற்றப் பின்வாங்க மாட்டாள். ஆனுல், பெற்ருேரே! இவ்வளவு கவலையோடும், அக்கறையோடும்காப்பாற்றினபிள்ளைகளின்சரீரம் எவ்வளவுகாலம் இவ்வுலகிலிருக்கும்? இவ்வளவு கவலையோடு கவனிக்கப்பட்டபிள்ளைகள் உங்கள்கண் முன்னுல் உயிர்விடவில்லையா? சரீரத்தைக் கவனிக்கவேண்டியதுதான், ஆனுல், முக்கியமாகப் பிள்ளைகளின் ஆத்துமத்தைக் கவனிக்கவேண்டும்.

ஆத்துமம் என்றும் அழியாதது. அழிந்துபோகும் சரீரத்திற்குப் படும் அரும்பெரும் பிரயாசையில் ஆயிரத்தில் ஒருமடங்கு பிள்ளையின்ஆத்தும விஷயத்தில் செலுத்துவீர்களேயானுல் எவ்வளவோ மேலானகாரியம். பிள்ளை வியாதியாய் இருக்கும பொழுது எத்தனையோநாள் பட்டினி, எத்தனைஇரவு கண்விழிப்பு. ஆனுல், பிள்ளைகள் ஆத்துமவியாதியால் கஷ்டப்படும்பொழுது ஏதாவது செய்கிறீர்களா? பிள்ளைகள் கெட்டவர்களாய்ச்சீவித்து [ந]டக்கும்பொழுது நீங்கள் செய்கிறதென்ன? சில வேளை முறைப்பாடு சொல்[ல]க்கூடும். ஆனுல், செய்கிறது ஒன்றுமில்லை. அதற்குப் பதிலாகப் பிள்ளைகளை மனந்திருப்பி நல்வழிப்படுத்தப் பிரயாசப்படுங்கள். உங்களால் முடியாவிட்டால் ஆண்டவரைப்பார்த்து மன்ருடுங்கள். அர்ச். அகுஸ்தீன் மாபெரிய அர்ச்சியசிஷ்டராக வரக்காரணம்யார்? புண்ணியவதியான அவர்தாயார் மொனிக்கம்மாள் அல்லவா? அகுஸ்தீன் மனந்திரும்பி நல்லபிள்ளையாகநடக்க அவள் சிந்தினகண்ணீர் எவ்வளவு? ஒருசந்திஉபவாசம் எவ்வளவு! செபம் ஒறுத்தல் முயற்சிகளுக்குக் கணக்குண்டா? அந்த அர்ச். மாதுக்கு ஆத்துமத்தின் மதிப்புத் தெரிந்தது. அதனுல் தன்மகன் மனந்திரும்ப இந்த அரியபெரிய பிரயாசையெல்லாம் கைக்கொண்டாள். தன்மகனையும் மனந்திருப்பினுள். பெரியஅர்ச்சியசிஷ்டராக ஆக்கினுள். ஏன் நீங்களும் உங்கள்பிள்ளைகள் மனந்திரும்ப இந்தவழிகளைத் தேடக்கூடாது? எத்தனை பெற்ருேர்கள் தங்கள்பிள்ளைகள் மனந்திரும்ப ஒருசந்தி உபவாசமாயிருந்தார்களென்று சொல்லக்கூடும்? கோவிலில் முதலாய்ப்போய் வேண்டிக்கொள்ள மாட்டார்கள். சிலபெற்ருேர்கள் தங்கள்பிள்ளைகளுக்குத் துன்மாதிரிகையாய் இருக்கிருர்கள். அந்தோ பரிதாபம்! எப்படிச் சர்வேசுரனிடம் கணக்குக்கொடுப்பார்களோ தெரியாது. சின்னப்பிள்ளைகள் கெட்ட வார்த்தைகள் பேசினுல் அவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாகச் சந்தோஷப்படுகிற நிர்ப்பாக்கிய பெற்ருேர்களும் உண்டு. பிள்ளைகள் கெட்ட தோழர்களோ[டு]சேர்ந்து கெட்டழிந்தாலும் கவலையில்லாப் பெற்ருேர்களும் உண்டு. கோவிலுக்குப்போய்த் தேவதிரவியஅனுமானங்களைப் பெருமலிருந்தால் அவைகளைப்பற்றிக் கவனிக்காமலிருக்கும் பெற்ருேர்களும் உண்டு. இப்பேர்ப்பட்டபிள்ளைகள் வளர்ந்தபின்பு பெற்ருேர்களுக்கும், குடும்பத்திற்கும், ஊருக்கும், தேசத்திற்கும் சிலுவைகளாயிருப்பார்கள். இதற்குப்பதிலாகப் பிள்ளைகளைத்தக்க கவனத்தோடு நல்ல பிள்ளைகளாய் வளர்த்துவருவார்களானுல் பெற்ருேர்களுக்கு எவ்வளவோமகிமை! எவ்வளவோபுகழ்ச்சி! அன்றுதேவதாயைப் பார்த்துச் சொன்னதுபோல "உம்மைச்சுமந்தஉதரமும், நீர்அமுதுண்ட கொங்கைகளும் பாக்கியம்பெற்றவைகளே" என்று உங்களைப்பார்த்துச் சொல்லுவார்கள். குடும்பங்களுக்குப் பாதுகாவலாகிய திருக்குடும்பமே கிறீஸ்துவ குடும்பங்களை ஆசீர்வதித்தருளும்!


# G. C. E. பரீட்சைகளுக்கு

1. உயர்தர எண்கணிதம்
சிவக்கொழுந்து மஹாதேவன்
ஒப்புயர்வற்ற சிறந்தநூல்—ரூபா 4-00

2. உலக பூமிசாஸ்திர விளக்கம்
சிவக்கொழுந்து
இருபாகங்களுமடங்கிய முழுத்தொகுதி—ரூபா 7-75

3. உயர்தர அக்ஷரகணிதம்
விரைவில் வெளிவரும்—ரூபா 4-50

சகாய விலைவிபரங்கட்கு எழுதுக:

மனேஜர்,
வடலங்கா புத்தகசாலை—பருத்தித்துறை


## கோபித்துப்பேசுதல்

(மொழிபெயர்ப்பு P. S.)

"உனக்குக் கோபம்வரும்பொழுது மௌனமாயிரு." இச்சிறந்தபுத்திமதி ஆயிரக்கணக்கான தொந்தரவுகளையும், அளப்பரியநட்டத்தையும் தடைபண்ணியிருக்கிறது. உனதுசினம் ஆறுமட்டும் பொறுமையாயிரு. அதன்பின் என்ன சொல்லவேண்டுமோ அதைச்சொல்லு. ஒருவன் கோபமாயிருக்கும்போது பேசும்வார்த்தைகள் பொதுவாக ஒருவன் சொல்லவிரும்புவதிலும் கூடுதலான அர்த்தத்தையே குறிக்கும். அதை மற்ருேர் மறக்கமுடியாமலுமிருக்கும்.


கண்டிப்பகுதியிலுள்ள ஒருதேயிலைச் செய்கையாளர் இரண்டுநிமிஷக் கோபாவேசத்தினுல் மிகவும்நஷ்டமடைந்ததை நான் அறிவேன். அவர் சாதாரணமாக ஓர்இரக்க[மு]ள்ளவர். ஆனுல், இடையிடையே அவருக்குக் கடுங்கோபம் உண்டாகும். ஒருமுறை அவருடையதொழிலாளர் ஒருகூட்டம் கூடி வேலைநிறுத்தம்செய்ய எத்தனித்தனர். அக்கூட்டத்துள் அவர்புகுந்து தமதுகையால் அவர்களைமிரட்டி மதியப்போசனத்திற்கு உங்களுக்கு ஒரு மணித்தியாலம் வேண்டுமா? "உம்! சரிசரி, இன்றுமதியப்போசன இடைவேளை இருக்காது" என்று கோபித்துச் சீறினுர்.

இச்சொற்களை வேலையாட்கள் மறக்கவில்லை. மன்னிக்கவுமில்லை. பலவேலைநிறுத்தங்கள் அங்குஏற்பட்டு அவர் வேலையையும் ஈற்றில்இழந்தார்

அதிகார பதவிகளில் இருப்பவர்கள் தங்கள்நாவை நிச்சயமாக அடக்க வேண்டும். கோபமாயிருக்கும்போது ஒருசிறிய சொல்லுத்தவறல் பாரதூரமானதீமையை விளைக்கக்கூடும். ஆகவே, ஒரு முதற்தரமான புத்திமதி, "உனக்குக் கோபம்உண்டாகும்போது மௌனமாயிரு" என்பது.

பலர் அதிகாரதண்டைக்கொண்டு தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள எண்ணுவர். ஒருகுழப்பம் ஏற்படும் பொழுது அங்குசென்று அவர்களுக்குக் கட்டளைகளைக் கொடுப்பர். அப்போது அக்குழப்பம் பெரியகலகமாக மாறும். ஒ[ரு] நிர்வாகி பொதுவாகத் தீர்க்கும்பிரச்சினைகளைப்பார்க்கக் கூடுதலானபிரச்சினைகளைத் தேடிக்கொள்ளுகிருர். அவர்பெரும்பாலும் ஒரேதன்மையையும், கீழ்ப்படிதலையுமே தம் தொழிலாளரிடம் எதிர்பார்க்கிருர்.

## முதல்வருட மரணஞாபகம்



"என்னைச் சீவியத்தில் நேசித்தவர்களே! என்னை மரணத்தில் மறவாதீர்கள்."

பிறப்பு: 22-7-88 இறப்பு: 18-2-56

எனது நேசபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய **ஸ்ரீமான் அலேசுப்பிள்ளை பிரான்சீஸ்பிள்ளை** அவர்கள் இவ்வுலகைநீத்த முதல்வருடம் இம்மாதம் 18-ந்திகதி திங்கட்கிழமை பூர்த்தியாவதால், அன்றுதினம் அவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம் ஆசனக்கோவிலில் ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும்.

இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளும், சங். சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளும், உறவினர் – சிநேகிதர்களும், ஏனையோரும் அவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக விசேஷவிதமாய் மன்ருடிக்கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேம்.

நேசபத்தாவை இழந்து துன்புறும்
**லூர்துமரி — பிரான்சீஸ்பிள்ளை**

அருமைத் தந்தையை இழந்து
துயருறும் பிள்ளைகள்:
**சங். சிஸ்றர் மேரி பிறசன்ரேசன்**
(திருக்குடும்பமடம், அனுராதபுரம்)
**சங். சிஸ்றர் குழந்தையேசுவின் மேரி கலிஸ்ரா**
(கார்மேல்மடம், அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு
# தாண்டவன்வெளித் தபால்

**மட்டுநகர்த் தாண்டவன் வெளித் தேவாலய ஆண்டுவிழா:** மட்டுநகர்த் தாண்டவன்வெளி பரிசுத்தவியாகுலமாதா தேவாலய ஆண்டு விழா சென்ற 1-1-57-ந்திகதி கொடியேற்றுவிழாவுடன் ஆரம்பமாகித் தினந்தோறும் மாலை 6மணிமுதல் நோவனை ஆராதனைகள் நடைபெற்றன. இறுதிநாளன்று 4,000பேருக்குமேற்பட்ட விசுவாசிகள் ஆராதனையில்கலந்து அதனைச்சிறப்பித்தார்கள்.

திருநாளுக்கு முந்தியவாரமுதல் பங்குவிசாரணைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களால தேவதாயின் மகத்துவம்பற்றிப் பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. திரிகோணமலை மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. ரி. செல்வராஜ், எஸ். ஜே. சுவாமியவர்களால் ஆண்டுவிழாவிற்கு முன்னுயத்தமாக 31-1-57 வியாழக்கிழமை தொடக்கம் மாசிமாதம் 3-ந்திகதிவரையும் ஞானத்தியானம் போதிக்கப்பட்டது. கடைசியானநான்குநாட்களிலும் விசுவாசிகள் தங்கள்நோவனைகளை வெகுசிறப்பாகக் கொண்டாடினர். மெர்க்குரிவிளக்குகளாலும், வண்ணக்கடுதாசிகளாலும், குருத்துக்களாலும் ஆலயமும், ஆலயவீதியும் அலங்கரிக்கப்பட்டிருந்தமை தேவலோககாட்சிபோனறிருந்தது. வெளிஆடம்பரங்களில் மாத்திரம் விசுவாசிகள் தாங்கள்நேரத்தைச் செலவிடவில்லைஎன்பதை, ஆலயத்துள்ளும், வீதியிலும் அவர்கள் மாதாவை நோக்கிக் கரங்குவித்தவண்ணமாய்ச் செபஞ்செய்துநின்றகாட்சி எடுத்துக்காட்டியது. ஒலிபெருக்கியின் துணையோடு பிரசங்கங்களும், மாலைஆராதனைகளும் நடைபெறலாயின.

திருநாளுக்கு முந்தியநாளன்று மாலை 6-30 மணியளவில் தேவதாயின் திருச்சுரூபத்தை மெர்க்குரிவிளக்குகளால் அலங்கரித்த நெய்யெரிவண்டியில் எழுந்தருளச்செய்து, விசுவாசிகள் எல்லோரும் கையில்மெழுகுவர்த்திகளுடன் பெரியதெருவால் சுற்றுப்பிரகாரமாக வந்தனர். சுற்றுப்பிரகாரவேளையில் தேவதாயின் தோத்திரகீதங்கள்பாடி, செபமாலை, பிரார்த்தனைகளை வெகுஅமரிக்கையாகச் சொல்லிவந்தனர். பக்திச்சபையோர் எல்லோரும் தங்கள்சின்னங்களை அணிந்தும், கொடிகளைஏந்தியும் வரிசைக்கிரமமாகச் சென்றனர். பி. ப. 7-30மணியளவில் மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்களால் குருப்பிரசாதிகள்பதின்மர் உதவிபுரிய "பொந்திபிக்கல்" என்னும் மாலைஆராதனை பாடப்பட்டது. திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்துக்குமுனநமதுபங்கைத் தேவயன்னைக்கு ஒப்புக்கொடுக்கும்செபம் விசுவாசிகளாலும், குருப்பிரசாதிகளாலும் பக்திஉருக்கமாகஓதி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும், பாப்பாசரின் ஆசீர்வாதமும் மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்களால் அருளப்பட்டன. திருநாளன்று (3-2-57) காலை முதலாம்பூசை 5-30 மணிக்கு வண. ரி. செல்வராஜ், எஸ். ஜே. சுவாமிகளால் நிறைவேறியது. இரண்டாம் பூசை பெரியபாடற்பூசையாகப் பங்குவிசாரணைக்குரவரால் நிறைவேற, வண. ரி. ஆறென்ஸ்சுவாமிகளும், வண. ரி. செல்வராஜ், எஸ். ஜே. சுவாமிகளும் உதவிபுரிந்தனர். இருபூசைகளிலும் பிரசங்கங்கள் "மாதாவின்மகத்துவம்" பற்றிச் செய்யப்பட்டன. பூசையிலே ஆயிரவருக்குமேற்பட்ட விசுவாசிகள் தேவவிருந்தருந்தி மெய்ம்மறந்திருந்தமை கண்கொள்ளாக் காட்சியாகவிருந்தது.

பூசைக்குப்பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும், பாப்பாசரின் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டன. ஈற்றில், விசுவாசிகள்அனைவரும் கொடிமரத்தண்டை பவனியாகச் சென்றதும் பங்குக்குரவரால் கொடிஇறக்கப்பட்டுத் திருநாள் இனிதுமுடிவுற்றது. பின்னர் அன்னதானம்வழங்கப்பட்டது.

—நிருபர்.

---

## காவலூர்க் கடிதம்

**லூர்தன்னை திருநாள்:** சென்ற 2-2-57 சனிக்கிழமை நவதினஉற்சவங்களோடு ஆரம்பமாகின பரிசுத்தலூர்தன்னையின்திருநாள் காம்பன், அர்ச். செபஸ்தியார் ஆலயத்தருகில் அமைந்துள்ள லூர்துகெபியில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தினமும்கட்டளைக்குரவர் மாதாவின்மகிமையையும், திருநாளின்மேன்மையையும், கிறீஸ்திவர்களுக்கு இத்திருநாள்படிப்பிக்கும் போதனையையும், மாதா லூர்துகெபியில் செய்துகொண்ட விண்ணப்பத்தையும்விளக்கி அரியபிரசங்கங்கள் செய்தார். திருநாளுக்கு முதல்நாளாகிய ஞாயிற்றுக்கிழமை இரவு திருச்சுரூப ஊர்வலம் சிறப்பாகநடைபெற்றது. விசுவாசிகள்அனைவரும் தங்கள்கரங்களில் மெழுகுவர்த்திகளை ஏந்தியவண்ணம் அணியணியாக நடந்துசென்றகாட்சியும், மெழுகுவர்த்திகளின் பிரபையும் மக்கள்தேவதாயில் கொண்டுள்ள அன்பைப் பிரதிபலித்தன. மறுநாள்காலை பாடற்பூசையுடன் திருநாள்இனிது முடிந்தது.

**காவலூர்கவிஞருக்குப் பொன்னுடை:** காவலூர்க்கவிஞன் என்று அறியப்படுகிறவரும், ஊர்காவற்றுறையைச்சேர்ந்தவருமான திரு. ஞா. ம. செல்வராஜா அவர்களுக்குச் சென்ற 3-2-57-இல் நடைபெற்ற தமிழரசு வாலிபமுன்னணி மகாநாட்டின் இறுதிக்கூட்டத்திலே, யாழ்ப்பாண முற்றவெளியில் 10,000 மக்கள்மத்தியில் தமிழரசு வாலிப முன்னணித்தலைவர் திரு. துரைரத்தினம்அவர்கள் பொன்னுடைபோர்த்தினர். மேலும், அவருக்கு ஈழத்தின் புரட்சிக்கவிஞன்என்னும் பட்டத்தையும்சூட்டினர். திரு. துரைரத்தினம்பேசியபோது, இந்தியாவிலே பாமரமக்களுக்கும், மற்றவர்களுக்கும் சுதந்திரஉணர்ச்சியைப் பாட்டுகள்—கவிகள்மூலம் கிளறிவிட்டுச் சுதந்திரப்போரில் அவர்களைத்தூண்டிவிட்ட பாரதியார், பாரதிதாசனைப் பின்பற்றி ஈழத்திலே தமிழ்மக்களுக்குத் தேசிய உணர்ச்சியைத் தூண்டிவிட்ட—சுதந்திர எழுச்சியைத் தட்டிஎழுப்பியகவிஞன் திரு. செல்வராஜா அவர்களே எனக்கூறினர். எனவே, அவருக்கு ஈழத்தின் புரட்சிக்கவிஞன் என்னும் பட்டம் மிகமிகப் பொருத்தமானதே. இவர்இயற்றியபாட்டுகள் உயிரோட்டமானவை, உணர்ச்சிமிக்கவை என்பதை இவரது பாடல்களைப்படித்தவர்கள் நன்கறிவர். இவர் சதாசகாயமாதா சரித்திரம், சதாசகாயமாதா பெரியபிரார்த்தனை, புதுமைமாதாகோவில் சரித்திரம், சிந்தாகுலமாலை என்பனவாகப் பலநூல்களை இயற்றியுள்ளாரென்பதும் ஈண்டு குறிப்பிடற்பாலது.

—நிருபர்

---

அமெரிக்கஜனாதிபதி ஐஸன்ஹாவர்அவர்கள் தமது வெண்மாளிகையிலே ஹங்கேரியஅகதிகளை வரவேற்று வாழ்த்துக்கூறுகின்றார்.



ஆஸ்திரியாவிலிருந்து சமீபத்திலே ஐக்கியஅமெரிக்கதேசம் போய்ச் சேர்ந்த ஹங்கேரியஅகதிகளின் குழுஒன்று வெண்மாளிகையிலே ஜனாதிபதிஐஸன்ஹாவர்அவர்களால் வாழ்த்தி வரவேற்கப்படுகின்றது. தங்கள் புதியதாய்நாட்டிலே அவர்களுக்கு நல்லதிர்ஷ்டத்தையும், மனப்பாக்கியத்தையும் அவர்விரும்பி ஆசிகூறுகின்றார். ஹங்கேரியிலே சோவியற்அரசின் கொடுங்கோன்மைக்குஅஞ்சி நாட்டுக்குவெளியே தப்பியோடிய 21,000 பேருக்கு மேற்பட்டமக்கள் அமெரிக்காவிலே புதியஇல்லங்கள் அருளப்படவிருக்கிறார்கள். இங்கே தனதுபெற்றாரினால் உற்சாகமூட்டப்பெற்ற பீற்றர் குரேஸ்என்ற 7வயதுச்சிறுவன் (முன்வரிசை) புதிதாகத்தனக்கு அருளப்பட்ட தன்னுடையபெயர்பதித்த அறிமுகப்பொத்தான் ஒன்றை ஜனாதிபதிக்கு நாணத்துடன் காண்பிக்கின்றான்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 10674.

ஊரெழு,
வீரவாகு வைரமுத்து.

—வழக்காளி

எதிராக

உரும்பிராய்,
விசுவலிங்கம் சுந்தரம்பிள்ளை.

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் 10674-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1957-ம்ஆண்டு பங்குனிமாதம் 26-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2750|ம். இதற்குத் தீர்வைத்திகதிதொடக்கம் ரூபா 2,500-க்கு 7வீதவட்டி 31-12-53 தொடக்கம் 21-9-54 வரைக்கும். அதன்மேல் முழுத்தொகைக்கும் 21-9-54 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 225ரூபா 25 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளிக் கோவிற்பற்றுச் சிவியாதெருஇறை "செம்மணிவெளி" பர. நெ. இலா 255. குழி $7\frac{1}{5}$. எல்லை: கிழக்கு—ரோட்டும், வெற்றிவேலு சுப்பிரமணியத்தின் ஆதனமும். வடக்கு—வெற்றிவேலு சுப்பிரமணியத்தின் ஆதனமும், ரோட்டும். மேற்கு—முடிக்குரியகாணியும், முத்தையா கதிரவேலுவக்கும், வேலுப்பிள்ளை கைம்பெண் சீதாலெட்சுமிக்குமுரிய ஆதனங்கள். தெற்கு—முடிக்குரியகாணியும், கழிவுநிலமும், தம்பையா கணபதிப்பிள்ளையின் ஆதனமும். இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
8-2-57.

---

## இந்தியஉணவுப்பொருட்கள்

இந்தியாவிலிருந்து உணவுப்பொருட்களைப் பெருந்தொகையாகத்தருவிப்பதற்குக் கூட்டுறவு மொத்தவிற்பனவுஸ்தாபனம் இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளருடன் ஒப்பந்தஞ்செய்துள்ளது. அதனால் ஏராளமான உணவுப்பொருட்கள் இலங்கைக்குத் தவறாது வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவு மொத்தவிற்பனவுஸ்தாபனத்தின் கொள்வனவுக்கோஷ்டிஒன்று இந்தியாவிலே இரண்டுவாரங்களாகச் சுற்றுப்பிரயாணஞ்செய்துவிட்டுக் கொழும்புவந்து சேர்ந்துள்ளது. வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்குபோன்ற உணவுப்பொருட்களைப் பெருந்தொகையாக இறக்குமதி செய்வதற்கேற்ற ஒழுங்குகளைத் தான்செய்துவிட்டு வந்திருப்பதாக இந்தத்தூதுக்கோஷ்டி தெரிவித்துள்ளது.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 14-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித வீரர்

## "ஆண்டவரே, நீர்யார்?"

பரிமாக்கள் பலர் ஆவேசங்கொண்டனபோன்ற அசுவங்கள்மீது அமர்ந்து வாளுடன் வளியெனப் பறந்துசென்றனர். இளைஞன் ஒருவன் ஏனையரின் முன்னால் எழிலுறச்சென்றான். ஏறக்குறையச் செஞ்சுடர் உச்சியடைந்த நேரம் 'தமாஸ்குஸ்' பட்டணத்தைச் சமீபித்துவிட்டனர். திடீரென விண்ணொளி ஒன்றெழுந்து திண்ணிய அவ்வீரர்குழுவைச்சூழவே, அவர்க[illegible]வரும் தம்நிலை பிறழ்ந்து குதிரைகளினின்று நழுவிவீழ்ந்தனர்.

ஈண்டுரைத்த குதிரைப்படைஞர் யாண்டுள்ளோரென விசாரிப்போம். முன்னணிசென்றவன் 'சவுல், என்ற வேதவிரோதி. மற்றையவர் அவனுக்குத் துணை நின்றவராவர். சவுல் கிறீஸ்துவர்களை வதைக்கத் தீராவிடாய் படைத்த திடகாத்திர புருஷர். தமாஸ்குஸ் பட்டணத்தின் உண்மைத் தேவ ஊழியரைக்கட்டி ஜெருசலேமுக்குக் கொண்டுசெல்ல உத்தரவுபெற்று, அங்கே பிரயாணமாய்ப் போய்க்கொண்டிருந்தார்

அரிய சிங்கத்தையொத்த இவ்விளஞ் செம்மல் 'சிசிலியா' நாட்டின் 'தார்ஸ்' நகரிலுதித்து ஜெருசலேமில் வளர்ந்து வந்தவர். அந்நாளின் மாமூலின்படி இவர் ஓர்சுயாதீன யூதனாயிருந்தார். கிறீஸ்துமார்க்கத்தை மாய்க்கத் தணியாத தாகமேற்கொண்டு, காட்டுஓநாய்போல் நாட்டில்அலைந்த இவர், நாடோறும் வீடுதோறும் புகுந்து கத்தோலிக்கஸ்திரீ பூமான்களைக் கட்டியிழுத்துச் சிறையில்போடுவித்து, திருச்சபையைப் பாழாக்கிவந்தார்.

உன்னதமன்னனின் புகலரும் செயலெலாம் வல்லபம் உள்ளதே. அவர் இப்பழிமிகு சவுலைத் தமது ஒளிமிகு விளக்காகப் பரிவொடு தெரிந்துகொண்டார். எனவே, இரத்தவேட்கை மிகக்கொண்டு தமாஸ்குஸ்நகரம் நோக்கிச் சென்ற சவுலிடம் உம்பரேத்தும் உத்தமன் தமது உள்ளக்கிடக்கையை வெளியிடலானார். எவ்விதமெனில், வானொளியால் வாடிவிழுந்த குதிரைவீரனை நோக்கி, "சவுலே! சவுலே!! ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" எனத் தேவன் இரங்கிக்கேட்டார். இக்குரல் செவியுற்று நடுக்கமுற்ற சவுல்பயமிகுந்தவராய், "ஆண்டவரே, நீர்யார்?" என' "நீதுன்புறுத்தும் யேசுநாதர் நாமே" என்றபதில் கேட்டது. பின்னர் சவுல் சற்றுத் தெளிந்தவராய், "ஆண்டவரே! நான் என்ன செய்யும்படி தேவரீர் சித்தமாயிருக்கிறீர்என்க, தேவன் இறுத்த மறுப்பாவது, "நீ எழுந்து பட்டணத்

(தொடர்ச்சி நாலாம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணு சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

பதினைந்து நிமிடம், கால்மணித்தியாலம். ஒரு நாளின் தொண்ணூற்ருறு பாகங்களில் ஒன்று. ஒருமுறை சீட்டாடச் செல்லும்நேரம். ஒருமுழுநாளில் கால்மணித்தியாலம் அற்பநேரம். ஆயினும் நன்குஉபயோகித்தால் நித்தியத்திற்கு மிகவும் உதவும்.

ஒருநாளின் தொண்ணூற்ருறு பாகங்களில் ஒன்றைத் திவ்வியசற்பிரசாத சந்நிதானத்தில், மனிதர் பாவங்களின் பரிகரிப்புக்காகச் செலவிடமாட்டீர்களா? உலகத்தை உற்றுநோக்கினல் இந்தப் பரிகரிப்பு அவசியமென்று விளங்கும். தீயஒழுக்கம், நேர்மையீனம், அநீதி, கடவுளைமறுத்தல் முதலியவைகளை மனிதர் மன்னித்துவிடுவது மாத்திரமல்ல, தகுதியென்றும், காலத்துக்கேற்றதுஎன்றுங் கூறுகிருர்கள்.

சருவேசுரனுடைய சிருட்டிகள் செய்யும் இந்த அவசங்கைக்குப் பரிகரிப்புச் செய்வது அவசியமாகின்றது.

உலகத்தில் யுத்தபீதியை ஒழிக்கவும், கவலையை நீக்கிச் சமாதானம் அருளவும் சருவேசுரன் உங்களுடைய இந்தச் சிறுபலிகளையே காத்திருக்கிருராக்கும்.

உங்களன்புள்ள,

அண்ணு.

---

## நரகம் உண்டா?

பிரான்ஸ்தேசப் புரட்சியின்போது லேயன்ஸ்நகர் நீதிமன்றத்துக்குக் கத்தோலிக்க குருவானவர் ஒருவரை இழுத்துச்சென்றுர்கள். "நரகம்உண்டென இப்பொழுதும் விசுவசிக்கிருயா?" எனக் குழப்பக்காரரில் ஒருவன் அவரிடம் பரிகாசமாகக்கேட்டான். "சந்தேகம் என்ன? நரகம் உண்டென்று நான் விசுவசிக்கிறேன். அதுவரை நான் அதை விசுவசியாதிருந்தாலும், நீங்கள் செய்யும் பாதகங்களே நரகம் உண்டென்னும்விசுவாசத்தை என்னில் பிறப்பிக்கும்" எனக் குருவானவர் பதில்கூறினர்.

---

## வானமீதிலே

"சாந்தினி"

வட்டநிலா! வட்டநிலா!!
வானமீதிலே
வண்ணநிலா! வண்ணநிலா!!
வானமீதிலே
பட்டம்போலத் தட்டைநிலா
வானமீதிலே
பறந்துபோகும் அழகைப்பாரு
வானமீதிலே

o

வெள்ளிநிலா! வெள்ளிநிலா!!
வானமீதிலே
விரைந்துபோகும் அழகைப்பாரு
வானமீதிலே
அள்ளிஜோதி வீசுகின்ற
அருமைவெண்ணிலா
அமுதநிலா அழகைப்பாரு
வானமீதிலே

o

பொட்டுநிலா! பொட்டுநிலா!!
வானமீதிலே
பூத்திருக்கும் அழகைப்பாரு
வானமீதிலே
கட்டிவெண்ணெய் போலநிலா
பட்டுவெண்ணிலா
களிப்பையூட்டும் அழகைப்பாரு
வானமீதிலே

---

குறிப்பு: தம்பி, தங்கைமாரிடமிருந்து கவர்ச்சியான தமிழ்நடையில் ஏராளமான விஷயதானங்களை எதிர்பார்க்கிறேன். அவைகளை "அண்ணு", சஞ்சுசையப்பர் அச்சகம், பெரியதெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமலனின் அன்பின் அழைப்பிதழ்

அமலன் தாம்அமைத்த அனைவோரையும் பலவிதமாகவும், பலவழிகளாலேயும் தமக்குத்தொண்டுபுரிய அழைக்கின்றார். அவரின் அழைத்தலோ பலவிதம். சிலஅழைத்தல்கள் இலகுவாகவும், இன்பமாகவும் இயற்கைக் கண்களுக்குக் காட்சியளிக்கும். ஆனால், சிலகஷ்டமாகவும், கடும்பரித்தியாகங்கள் நிறைந்தனவாகவும் காணப்படும். ஆனால். இறைவனின் அழைத்தல் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுவிதமாக மனதில் தோன்றும்.

சிலர் இளமைப்பராயத்தை அடைந்ததும் அவர்கள்குருவானவராகவோ, கன்னியாஸ்திரியாகவோ வரவிரும்புகின்றனர். இந்தவிருப்பம் அவர்கள்மனதில் தானாகவே ஊற்றெடுத்ததாகக் காட்சி அளிக்கும். வேறுசிலர் தமது குடும்ப நிலையை, தமது சீவியத்தை, தமதுமனதின் போக்குகளை நன்கு அறிந்து ஆராய்ந்த பின்னரே அமலனின் அழைத்தலுக்குச் செவிசாய்க்கின்றனர். இன்னும் வேறுசிலர் உலகத்தை நன்குபடித்து, இவ்வுலக இன்பங்கள் யாவும் மர்மமான மாயவலைகள்என்று அறிந்தபின் உலகஇன்பங்களைவெறுத்துத் துறவறஇன்பத்தை நாடுகின்றனர். இன்னும் ஒருசாரார் தமதுமனத்திலே தேவஅழைத்தலின் தொனிகேட்டவுடனே தமதுஊக்கமான முயற்சியாலும், ஆன்மகுருவின் நற்புத்திமதிகளாலும் நன்கு தூண்டப்பட்டு, தேவஅழைத்தலுக்கு உடனேயே செவிகொடுக்கின்றனர். இவ்வித[illegible] இறைவனிடமிருந்து அழைத்தல் வரும்வழி இன்னும் பலவிதம்.

துறவறத்தில் இன்பத்தைமட்டுமே அடையலாமென்ற மனப்பான்மையுடன் எவரும் தேவஅழைத்தலுக்குச் செவிசாய்ப்பது நன்றன்று. தேவன் துன்பத்தின் மத்தியிலேயே இன்பத்தை அருளுகிறார். அமலன் தாம் தெரிந்தெடுத்தவர்கட்குத் துன்பத்தின்சாயலாக இன்பத்தைக் கொடுக்கின்றார். கஷ்டங்களை அளித்தே அவர்களின் ஆன்மாவைக் களங்கமற்றதாக்குகின்றார். இதுவே இறைவனின் செயல். ஆகையால் துறவறவாழ்க்கையைத் தெரிந்துஎடுப்பவர்கள் இன்பத்தை எங்ஙனம் ஏற்றுக்கொள்கிறார்களோ அதேவிதம் துன்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையுடையவர்களாகச் சீவிக்கத் தெண்டிக்கவேண்டும். இதற்கு ஊன்றுகோல்களாயிருக்கும் பொறுமை, கற்பு, தாழ்மை, அமைச்சல்என்னும் அழகிய இந்நான்கு ஆபரணங்களையும் தம்மேல் அணிந்துகொண்டு சிறுபிராயந்தொட்டு அதன்படியே நடந்திருந்தால், எவ்விதமான கஷ்டமான வாழ்க்கையின் துன்பதுரிதங்களும் அவர்கட்குத்துன்பமாயும், கஷ்டமாயும் தோன்றா.

சேற்றின்மேல் செந்தாமரை மலர்கின்றது; முட்களின்மத்தியில் நறுமணம் கமழும் றோசா மலர்கின்றது; துன்பத்தின் மத்தியில் இன்பம் மிளிர்கின்றது; சிலுவையின் மத்தியில் முத்தியைஅடைவோம் மனமே!

அமலனின் அன்பை அடையவிரும்பின் அவரின் அழைத்தலுக்குச் செவிசாய்த்து, அமைச்சல்எனும் அழகிய ஆபரணத்தை ஆன்மாவின்மேல் அணிந்துகொள்.

**கொன்ஸ்ரன்ஸ் பிலிப்ஸ்**

கோயிலுக்குள் கதைப்பது ஆண்டவருக்கு அநாசாரம், அயலானுக்குப் பராக்கு, எமக்குப் பயனற்றது.

"என்வீடு செபத்தின் வீடு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஆண்டவரே, நீர்யார்"?

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

துள்ளே போ. நீசெய்யவேண்டியதுஇன் னதென்று அங்கே அறிவாய்'' என்று அருளிச்செய்தார்.

சூழநின்றோர் ஒலியைஉற்ற ரன்றி வேறொன்றையும் கண்டிலர். சவுலோ விண்ணொளியின் காந்தியால் தம்கண் ணொளியிழந்தார். பின்னர் அடுத்துநின் றோரால் கைலாகுகொடுத்து வழிநடத் தப்பட்டுப் பட்டணத்தை அடைந்தார். அங்கு நேர்வீதி என்ற வீதியில் ஒருவீட் டில்தங்கி மூன்று தினங்களாக உபவா சித்துத் தபம்புரிந்தார். கடைசியில் அங்கு அப்போது வதிந்த அருந்தவன் 'அனனியாஸ்' என்பவர் தேவதிருவு ளம் தனக்கு ஏவியபடி சவுலுக்குப் பார்வையொடு ஞானதீட்சையும் நல்கி னர்.

ஞானதீட்சை நலனுறப்பெற்ற சவுல் நாளுக்குநாள் வேதத்தில் உறுதிப்பட்டு வந்தார். பரமனின் மெய்ஞ்ஞானத் தைப் பலருக்கும் பண்புறப் பயக்க வேண்டுமென்ற ஆவல் இவரை ஆட் கொண்டது. உடனே தாமதமின்றி இஸ்ரூயேல்தேவனே மெய்யானகடவு ளென்று போதிக்கத் தொடங்கினர். அதைச்செவியுற்ற மற்றோர் யாவரும் இவரது முந்தியநடக்கையை நன்கறிந்த வராகலின் இவர் போதனையைப்பற்றி வியப்பெய்திநின்றூர். இவரது அற்புத மாறுதலால் கலக்கமுறநேர்ந்த யூதர்கள் இவரையொழிக்க வழிதேடி உழைப்பா ராயினர். எனினும், தேவபராமரிப்பின் உதவியால் அவர்களின் சூழ்ச்சிக்கு அவர் தப்பிக்கொண்டார்.

இதன்பின் இவர், 'பர்னபா' என் னும் ஓர் வேதபாரகரோடு அநேக தே சங்களுக்கும், தீவுகளுக்கும் புறப்பட்டுப் போய்ச் சத்தியமறையைப் போதித்து வந்தார். தம்மால் வேதத்தில் உட்படுத் தப்பட்ட தேசத்தாரோடு தமது நிருபங் களின் மூலமாய்ப்பேசி அவர்களை உறு திப்படுத்திக்கொண்டு வந்தார். அவ் வாறு இவர், உரோமையர், கொரிந்தி யர் 1, கொரிந்தியர் 2. கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலேசியர், தெசெலோனிக்கேயர் 1, தெசெலோ னிக்கேயர் 2, திமோத்தேயு, தீத்து, பிலமோன், எபிரேயர் முதலியோருக் கெனப் பதினெருநிருபங்களை வரைந்தி ருக்கிறூர்.

ஆத்தும இரட்சணியத்தையே தமது ஆதாயமாகக் கருதிய இவர், தம்சீவிய நாள்முழுதையும் பரமன்பணியில் பண் புறவிடுத்து, பற்பலபுதுமைகளையும் அரிய அதிசயங்களையும் அனைவரும்மகிழ ஆற்றிவந்தார். தம்வாழ்நாள் இறுதி யில் தம்மைமுழுமையும் நித்திய பிதா வின்பாதம் ஒப்படைத்து நித்தியானந் தத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவரே இன்று திருச்சபைக்கோர் வச்சிரத்தூணுய் நின்று நிலவும் அர்ச். சின்னப்பர். இப்பெரிய அப்போஸ்தலர் மனந்திரும்பிய திருநாள் வழிமுறைவழு வா நம் சத்தியதிருச்சபையில் வருடந் தோறும் தைமாதம் இருபத்தைந்தாம் தி[illegible]தி கொண்டாடப் பெறுகிறது. இந் நாளில், நாமும் இவ்வற்புதரின் அடிச் சுவடுகளைப் பின்பற்றிப் பரமபதம டைய அருமரி அமலன் கிருபைபுரி வாராக!

## திருக்குறள்

வள்ளுவர் எழுதியது திருக்குறள்
வாழ்க்கைக்கு உதவுவது திருக்குறள்
தமிழிற் சிறந்தநூல் திருக்குறள்
தனிப்பெருமை யுடையது திருக்குறள்
அறம்பொருள் இன்பநூல் திருக்குறள்
அழியாத தமிழ்ச்சொத்து திருக்குறள்
எல்லாம் நிறைந்தது திருக்குறள்
இரண்டடிப் பாட்டுள்ள திருக்குறள்
உலகம் போற்றும்நூல் திருக்குறள்
உயரிய நீதிநூல் திருக்குறள்

— வி. அலோஷியஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org